1424

VHs 849

Regd No M 878

பூர்ணசந்

பூர்ணசந்திரோதயம்.

பிரஹ்மஞானம், மதம், சாஸ்திரம், கலை, நாகரீகம்
இவைகளைப் பரவச் செய்யும்
ஓர் சிறந்த மாதாந்தரத் தமிழ்ப் பத்திரிகை

தொகுதி 9 } காளயுக்திஹூ சித்திரைமீ
1919ஹூ ஏப்ரல்மீ } பகுதி 12

விஷயங்கள்

1. தற்கால நிலைமை—ஆர். அரங்கஸ்வாமி ஐயர், பி. ஏ. 344 a
2. பிரஹ்மஞான தரிசனம் (பாலபாடம்)—வி. வெங்கு சாமி ஐயர் ... 345
3. சகோதர பாவம்—இராமசந்திர நாயுடு 348
4. குழந்தைகளை அன்பால ஆளுதல்—குல்கர்ணி 354
5. ஆத்மார்த்தக் கல்வி அவசியம்—கே. எஸ். இராமசந்திரய்யர் 361
9. புத்தகவிமர்சம் 368

அ. அரங்கசாமி ஐயர் B. A., B. L. பத்திராதிபர்

தபால் சார்ஜ் உள்பட வருஷச் சந்தா இந்தியாவுக்கு ரூ. 2
அன்னிய நாடுகளுக்கு ரூ. 2—8—0 தனிப்பிரதி அணா 4

மதுரை விக்டோரியா அச்சியந்திர சாலையில்
பதிப்பிக்கப்பெற்றது.

Copy-right Reserved.

நமது திருத்தப்பட்ட விளம்பர விகிதங்கள்

	1 வருஷம்	9 மாதம்	6 மாதம்	3 மாதம்	1 மாதம்
1 பக்கம்	ரூ 50	ரூ 38	ரூ 28	ரூ 14½	ரூ 5
¾ ஷை	ரூ 38	ரூ 28	ரூ 20	ரூ 11	ரூ 4
½ ஷை	ரூ 26	ரூ 20	ரூ 14	ரூ 8	ரூ 3
¼ ஷை	ரூ 14	ரூ 11	ரூ 7½	ரூ 4	ரூ 1¾
1 அங்குலம்	ரூ 10	ரூ 7½	ரூ 5½	ரூ 3	ரூ 1

அடியிற்கண்ட புஸ்தகங்களை நீங்கள் அவசியம் வாங்கவேண்டும்

முந்துங்கள்! **விலைசொற்பம்!**

1 ஸாக்ரடீஸ் சரித்திரம்—புரொபஸர் ரெங்காச்சாரி 0—12—0
2 விக்கிரஹாராதனை—சம்பாஷணை—கே. எஸ். ராமச்சந்திரய்யர் ... ... 0—1—0
3 மீனாக்ஷிசுந்தரம்—நாடகம்-வெங்கிட்டராமய்யர் ... ... 0—6—0
4 கல்வி கற்பித்தல்—ஈசுவர கைங்கரியம் ... 0—8—0
5 எனது பிரதிக்ஞை ... ... 0—12—0
6 பிரஹ்மக்ஞானத்தின் விசாரத்தால் நமக்குறும் பயன் யாது ... ... 0—9—0
7 நமது பெரும் துரவஸ்தை—இது நீங்கும்வழி 0—3—0
8 கர்மநாசம் ... ... 0—3—0
9 சின்னங்கள்... ... ... 0—3—0
10 ரிஷிகள் அல்லது மகாத்மாக்கள் ... 0—3—0
11 ஸன்மார்க்க முறையும் சம்சாரமும் ... 0—3—0
12 மோக்ஷம் அல்லது வீடுபெறல் ... 0—3—0
13 ஸ்தூல பிரபஞ்சதர்மங்கள்—ஆத்மதர்மங்கள் 0—3—0
14 என் குருநாதன் என்னை ஏன் ஏற்றுக்கொள்ளக் கூடாது ... ... 0—3—0
15 மகாலயபக்ஷமும் நவராத்திரியும் ... 0—1—0
16 காயத்ரி ராமாயணம் ... ... 0—1—0
17 காயத்ரி ... ... 0—1—0
18 சன்மார்க்க முறையில் ஹிதோபதேசம் ... 0—2—0
19 ஹிந்து என்பவன் எவன் ... 0—1—0
20 லோககுருவின் அவதாரங்கள்... ... 0—1—0
21 புத்த சரித்திரம்... ... ... 0—0—6
22 தியாஸபியால் உள்ள பிரயோஜனங்கள் ... 0—2

தபால் சார்ஜ் வேறு.

பூர்ணசந்ரோதயம் ஆ

பூர்ணசந்திரோதயம்.

பிரஹ்மஞானம், மதம், சாஸ்திரம், கலை, நாகரீகம்

இவைகளைப் பரவச்செய்யும்

ஓர் சிறந்த மாதாந்தரத் தமிழ்ப் பத்திரிகை

1918 ௵ மேமீ முதல் 1919 ௵ எப்பிரல்மீ
வரை 12 சஞ்சிகைகள் கொண்டது.

அ. ரெங்கசாமி ஐயர் B. A., B. L. பத்திராதிபர்

வருடச்சந்தா ரூ 2

காப்பி ரைட் ரிஸர்வ்ட்

மதுரை, விக்டோரியா பிரஸ்.

விஷய அகராதி

பக்கம்

ஆத்மார்த்தக் கல்வி அவசியம்—கே. எஸ். இராமசந்திர ஐயர். 361

இந்தியச் சாரணர் சங்கம்—பி. எ. சுப்ரஹ்மண்யம். 184, 206

இந்தியச் சாரணர் கைத்தொழிற் பொருட் காட்சி ... 296

இராப்பள்ளிக் கூடங்கள்—இ. எஸ். சுந்தரராஜன். ... 329

குரு சிஷ்ய லக்ஷணம். 237

குரு பூஜை—வி. ஆர். சுந்தரராஜ ஐய்யங்கார் ... 150

குழந்தைகளை அன்பாய் ஆளுதல்—குல்கர்ணி. ... 354

கொழும்பு நாடார் சங்கத்தின் பொதுக் கூட்டத்துக்கு
நிரூபம்—ஸீ. ஜினராஜதாசர். 233

சகோதர பாவம்—இராமசந்திர நாயுடு. 348

சந்தியா வந்தனம்—கே. எஸ். இராமசந்திர ஐயர். ... 321

சமாசாரக் குறிப்பு. 63, 171, 216, 279, 320

சாரணர் பக்கம். 259, 275, 319

சிறுவர்பக்கம்—குண்டதாரன் கதை—சொர்ணவேலன். 309

ஷை—தேசாபிமானம்—வி. வெங்குசாமி ஐயர். ... 341

சுதேசக்கல்வி—ஆர். அரங்காச்சாரி எம். ஏ. எல். டி. 41, 73

தற்கால நிலைமை—ஆர். அரங்கசாமி ஐயர். 2, 33, 65, 97, 129
177, 185, 217, 250, 281, 313 344a

தர்மம்—எம். எம். நாராயணசாமி ஐயர். ... 244, 277

தார்மிக பிராஹ்மண சங்கம்—டி. வி. கோபாலசாமி ஐயர். 122

திருவனந்த புரத்தில் புலையர் கூட்டம். 294

தியாசபியால் உள்ள பிரயோஜனங்கள்-இராமசந்திரநாயுடு 193, 224

தேசீயக்கல்விச் சிறப்பு—வே. முத்துசாமி ஐயர் எம். ஏ. எல். டி. 22

நல்ல சமயம்—ஆத்மநாத ஐயர். 9

பகவத் ஸ்துதி—இராமசந்திர நாயுடு. 260

பத்திரிகை விமர்சம். 13, 61, 93, 136, 279

பத்திராபர் பக்கம். 127, 249

பம்பாய் ஜீவதயாஞான பிரசாரக நிதி. 118
பம்பாய் சேவாஸதனம் 278
பிரஹ்மஞான தர்சனம்—வி. வெங்குசாமிஐயர். 27, 49, 90,
.. ... 137, 168, 201, 239, 257, 289, 338, 349
பிரஹ்மஞான சபையும் அதன் வேலையும்—அ. அரங்கஸ்வாமி
ஐயர், பி. ஏ. பி. எல். 143, 297
பிரஸிடெண்டு வில்ஸன் அவர்கள் உபந்நியாசம்—ஆர். அரங்க
ஸ்வாமி ஐயர். 155
புத்தக விமர்சம். 29, 62, 96, 128, 139, 167, 175, 203,
... ... 208, 213, 280, 311, 344, 368
புனர்ஜன்மமும் கர்மமும்—ஆர். பஞ்சாபகேசய்யர். 52
மனிததேகமும் அதனுலடையும் பெரும்பயனும்—கே. எஸ்.
துரைசாமி பண்டிதர். 210
மநுஸ்மிருதியின் ஆதாரம்-பி.எஸ்.ராமசுப்பையர். 14, 78, 105, 140
முக்கிய அறிவிப்பு—பத்திராதிபர். 1
மைசூர் பள்ளிக்கூடங்களில் மதப்பயிர்ச்சி. 293
யான் செய்யவேண்டிய தென்ன—எஸ். வெங்கிடாசலம் ஐயர். 270
ரிஷிகள் உபதேசம்—இராமசந்திர நாயுடு, ... 126, 179
லோககுருக் கும்மி. 209
ஸ்திரீகளுக்கு ஓர் உபந்நியாசம்,—மங்களாம்பாள். ... 58, 87
ஸர் ரவீந்திரநாத டாகூர் உபந்நியாசம்—ஸபாபதி. ... 302
ஜகத்குரு ஸ்தோத்திரம்—இ. வி. நாராயண ஐயர். ... 232
ஜீவகாருண்யம்—இராமானந்தயோகி ... 30, 94, 116

சிறந்த புத்தகங்கள்

மரணபயம் வேண்டாம்	விலை அணா 2
லோககுருவாகிப்பரமன் வருவானேன்	அணா 1
மனிதன் வம்சாவளியின் உண்மை	அணா 8
உதாஸீன ஸாது ஸ்தோத்திரம்	அணா 6
விக்கிரஹாராதனே	அணா 1
சர்வ சமயத்தைப்பற்றியும் பகவான் ஸ்ரீ கிருஷ்ணனைப்பற்றியும் ஓர் சம்பாஷணை	அணா 2
தியானக்கிரம விஷயம்	அணா 1
ஸாக்ரடீஸ்	அணா 12
ஹிந்து என்பவன் எவன்?	அணா 1

தபாற்கூலி வேறு

மானேஜர்,

பூர்ணசந்திரோதயம்; ஆபீஸ், மதுரை

ௐ

सत्यात् नास्ति परो धर्मः

பூர்ணசந்திரோதயம்.

தொகுதி 9 } காளயுக்தி௵ சித்திரை௴ 1919௵ எப்ரல்௴ { பகுதி 12

தற்கால நிலைமை.

இச்சஞ்சிகை வெளிவரும் காலமானது தாமதப்பட்டுவிட்டமையால் மே௴ துவக்கத்தில் நடந்த சங்கதிகளையும் இங்குக் குறிப்பிடுவோம். நமது பிரஹ்மஞான சபை அக்ராஸனர் அவர்கள் இங்கிலாந்துக்குப் புறப்பட்டு போயிருக்கின்றனர். நம்முடைய ஜன்ம பூமியாகிய பாரத வருஷமானது கர்ம பூமியென்று நமது புராண இதிஹாஸங்களிலும் சாஸ்திரங்களிலும் கொண்டாடப்பெற்றது. தொன்று தொட்டு ஜீவன் முக்தர்களும், பகவதவதாரங்களும் இப்புண்ணிய பூமியில் தோன்றியிருத்தலால் இவ்விந்தியாவுக்கு எக்காலமும் பெருமை நிலைத்திருக்கின்றது. இக்கலிகாலத்திலும் கூட இயற்கையாகவே பாரமார்த்திக வாழ்வில் சிந்தையுள்ள அநேக ஜீவர்களும் முமுக்ஷுக்களாயிருக்கும் அநேக ஜீவர்களும் இந்நாட்டில் தான் அநேகமாய்ச் சஞ்சரிக்கிறார்கள். பிரஹ்மஞான சபையின் அந்தரங்க ஸ்தாபகர்களான மஹாரிஷிகளுடைய புண்ணியம் வாய்ந்த ஜன்ம பூமியாம் இது. உலகத்திற்கே ஆத்ம ஞானமா

னது பாவிச் செழிக்கச் செய்வதற்காக அமைக்கப்மட்ட ஒரு பெரும் ஏரி போன்றது. இப்புனிதபூமி. உலகத்தில் தோன்றியுள்ள ஒவ்வொரு தேசத்திற்கும் உரித்தான ஒரு கடமை உள்ள தென்றும் அக்கடமையை நிறைவேற்றி, அதனலாய பயனை உலகத்தின் சமுதாயத்திற்குக் கொடுத்தலே ஈசன் அத்தேசத்தைப் படைத்ததின் கருத்தெனப் பெரியோர் கூறுகின்றனர். ஆதலின், இந்தியாவானது உலகத்திற்கே பிரஹ்மஞானப்பேற்றை அளிக்கவல்ல குருநாடாகக் கருதப்பட்டதென்பர் அறிஞர். இது காரணம் கொண்டே தான் நம் நாடானது ஞாபகத்துக் கெட்டாத காலம் தொடங்கி உஜ்ஜீவித்து வருகின்றது. புராதன நாகரீகங்கள் அநேகம் இந்நிலவுலகில் நீரிற் குமுழி போல் தோன்றி மறைந்து போயின. இருந்தபோதிலும் எல்லா நாகரீகங்களுக்கும் முதற்கண் தோன்றிய இந்திய நாகரீகமானது இன்னும் தலை நிமிர்ந்து நிற்கின்றது. பஞ்சஜநா: என்று ஹிந்து சாஸ்திரங்களில் கூறப்பட்ட ஐந்தாவது மனிதவர்க்கத்தின் முதன்மையான வகுப்பார் இந்துக்களாவர். அவ்வர்க்கத்தின் ஐந்தாவது வகுப்பார் ஆங்கிலேயர் ஆவர். ஐந்தாவது வர்க்கத்தின் ஐந்தாவது வகுப்பார் காலந்தான இந்த ஐந்தாவது வர்க்கத்தாரின் மேன்மையான உன்னத ஸ்தானமாகும். இந்த நாகரீகத்தின் மேன்மையானது இனிமேல் தான் நன்கு விளங்கப்போகின்றது. பாகு பலத்திலும், மனோதிடத்திலும், உற்சாகத்திலும், சுறுசுறுப்பிலும், நிர்வாக சக்தியிலும் மிகுந்த ஐந்தாவது வகுப்பாரின் நாகரீகத்திற்கு முதலாவது வகுப்பாரின் அமைதியும், சாந்தமும், ஞானத்தேர்ச்சியும், முதிர்ந்த பக்குவமும் சேர்ந்தால் எவ்வளவு அழகாயிருக்கும்? அவ்விதமே இவ்விரு நாகரீகமும் ஒன்று சேர்ந்து, ஒன்று மற்றொன்றினுடைய சீரிய குணங்களால் அழகாக்கப்பட்டு விளங்கவேண்டுமென்பது உலக நியந்தாக்களுடைய கருத்து. அவர்களுடைய கருத்துத்தான் உலகத்தில் சம்பவங்களாய்ப் பின்னர் நிகழ்கின்றன. ஆனல் உலகத்திற்கு ஞானப்பேற்றை அளிக்க

வல்ல நம் பாரத வருஷமானது தன்னுடைய தர்மத்தைச் செய்யவல்லதாய் ஏற்பட வேண்டுமாயின் முக்கியமான நிபந்தனை ஒன்றுண்டு. அது யாதெனின், இந்தியாவானது உலகத்தாரின் நன்கு மதிப்புக்குப் பாத்திரமாகும்படி பூர்ணமான ஸ்வதந்திரத்தையும், சக்தியையும் பெறுதல்வேண்டும். வியாதிக்கிரஸ்தனானவன் எப்படி பிறருக்கு உதவமுடியும்? பந்தத்திற்குட்பட்டவன் எங்ஙனம் உலகத்திற்கு மோக்ஷத்தின் மேன்மையை விளக்கவல்லவன்? அங்ஙனம் செய்ய முயன்றாலும் அம்முயற்சி பூர்ண பலனை பெறுதலரிது. ஆகையால் நமது புண்ணிய பூமியானது தனது தர்மத்தைச் செய்யவல்லதாய் ஏற்படவேண்டுமாயின், அது பூர்ண சுதந்திரம் பெறுதல்வசியம். உலகத்தின் தற்கால விகாஸத்தில் பாகுபலமின்றி பூர்ண சுதந்திரம் நிலைத்தல் அருமையாதலின், உலகநியந்தாக்களுடைய கருத்து யாதெனின் பாகுபலத்திற் சிறந்த ஆங்கில அரசாட்சிக்குள் இந்தியாவானது பூர்ணசுதந்திரம் பெற்ற ஒரு நாடாக ஏற்படவேண்டுமென்பது. மேற்கூறியபடியினால் தான், பாரத வருஷத்திற்கும், இங்கிலாந்துக்கும், உலகத்திற்கும் பூர்ணமான பிரயோஜனமானது ஏற்படும். இவ்விதமாய்த்தான் லோக நியந்தாக்களுடைய ஆஞ்ஞையென்று நமது தலைவர் பன்முறை உரைத்திருக்கின்றார். அந்த ஆஞ்ஞையானது எவ்விதமாயினும் நிறைவேறும் என்பது திண்ணம். ஆனால் அதை நிறைவேற்றுவதற்கு உபயோகப்படும் கருவிகளில் ஒன்றாயமைவது பெறுதற்கரிய பெரும் பாக்கியமாம். அதிலும் இவ்வுண்மையை அறிந்து அறிவுடன் அக்கருத்தை நிறைவேற்ற முயல்வதைப்போல் சிலாக்கியமானது வேறு ஒன்றும் இல்லை. ஆகையால் நமது அன்னையார் தமது திவ்விய திருஷ்டியால் இவ்வுயர் நலம் வாய்ந்த உண்மைகளை உணர்ந்து அவ்வகளை இந்நிலவுலகில் தோற்றுவிக்க முயன்று வருகின்றனர். அம்முயற்சியின் பெருமை தான் என்னே! முதிர்ந்த வயதில் இளையவராலும் முடியாத உற்சாகத்தோடும், உழைப்போடும் பாடுபடும் இவ்வுத்தமியின் அதிசயச்

செயலைக்கண்டு வியக்காதார் யாரும் இலர். இவர்தம் விரோதிகள் கூட ஆச்சரியப்படுகின்றனர். நமது தலைவரது உழைப்புக்குக் காரணத்தை உள்ளபடி அறியாதவர் அதை அறியாமல் ஆச்சரியமுற்று, அவ்வுழைப்புக்குப் பற்பல காரணங்களைக் கூறுகின்றனர்.

***

நமது அக்கிராஸனருடைய வாழ்நாளின் சரிதத்தை நோக்கும் பொது, மேற்கூறியபடி உண்மையறிவற்றவர், ஒரு பாகத்திற்கும் மற்றொரு பாகத்திற்கும் முறண் ஏற்படுகிறதென்றும், இவர் நிமிஷத்திற்கு நிமிஷம் மாறும் சுபாவமுடையவரென்று பேதமையால் கூறுகின்றனர். உண்மையறிவு இருந்தால் தான் எல்லாவற்றையும் தொகுத்து முன் பின் முறண் இன்றி அறியக்கூடும்.

***

மேற்கூறிய காரணம்பற்றியே நமது தலைவர் இந்தியாவின் மேம்பாட்டிற்கு உழைத்து வருகின்றனர். பிரஹ்ம ஞான சபைத் தலைவராயிருந்து கிளைச்சபைகள் உள்ள ஒவ்வொரு நாட்டிற்கும் செல்லவேண்டிய தவசியமாயினும் இந்தியாவுக்குப் பாடுபட்டால் உலகிற்கே பாடுபட்டதாகும் என்ற காரணத்தால் சென்ற பலவருஷங்களாக இந்தியாவிலேயே தம்முடைய பூரணசக்திகளையும் செலவழித்தார். தம் சக்திகளை மட்டுமோ? தம்முடைய துவாரா மேல் உலகங்களினின்று பிரவகிக்கும் அருட்சக்திகளையெல்லாம் இந்தியாவிலேயே பாய்ச்சினர். அவ்வருட் பிரவாகத்தால் அல்லவா இந்தியாவில் அவ்வபூர்வக் கிளர்ச்சியானது உண்டாயிற்று? அவ்வற்புத பிரவாகத்தால் அல்லவா ஒரு மானிட ஸ்திரீ ஆச்சரிய கரமான வேலையைச் செய்யமுடிந்தது?

***

இவ்வுழைப்புக்கெல்லாம் பலிதமாகும் காலம் இப்போது ஏற்பட்டிருக்கின்றது. இந்தியாவின் சுதந்திரமா

னது இங்கிலாந்தின் ஜனங்களுடைய கொடையிலிருக்கின் றது. சில மாதங்களுக்கு முன் முற்றுப்பெற்ற கோர யுத்தத்தில் யாதொரு கைம்மாறும் கருதாது, தன் சக்திக்கு மேற்பட்டே, பணத்தாலும், சைனியத்தாலும், உழைப்பாலும், ஒருமித்த அனுதாபத்தாலும், இந்தியாவானது நம் அரசருக்கு உதவி புரிந்திருக்கின்றது. அவ்வுதவியைக் கண்ணுற்று அக்காலத்தில் யாவரும்வியந்தனர். தம்மால் ஜயிக்கப்பட்டு தம் ஆளுகைக்குட்பட்ட பத்தர்களான ஒரு ஜாதியாருக்கு இவ்வித மனோவிகாஸம் எங்ஙனம் ஏற்பட்டது என்பதை மேல் நாட்டார் அறிய முடியவில்லை. தம்மைப்போல் பிறரையும் கருதினர் போலும்! ஆனால் இந்தியர் மேற்கூறியபடி கைம்மாறு கருதாமல் உதவியதே, இந்தியாவானது உயர்பதவியை அடையும் என்பதைக் காட்டியது எனலாம். ஆனால் பெருவியப்பும், நன்றியறிதலும் இங்கிலாந்தில் பெரும்பாலர் சம்மந்தப்பட்டமட்டில் காற்ருய்ப் பறந்து போய் விட்டன. அவர்கள் நினைப்பது என்னவென்றால் இந்தியர் நம்முடைய ஆளுகையில் மிகவும் திருப்தியாய் இருக்கிறார்கள். ஆகையால் இதுவரை நாம் ஆண்ட மாதிரியே ஆளவேண்டியது தான் அவர்களுக்கு திருப்தி. இல்லையேல் இவ்வளவு நன்றியறிதலோடு நமக்கு உதவி செய்ய முன்வருவார்களா? ஆகையால் இந்தியர்களுக்கு சீர்திருத்தங்கள் அவசியமில்லை. என்று நினைக்கலானார்கள். மேலும் சீர்திருத்தங்கள் செய்தால் நம்முடைய சௌகரியங்களும் குறையும் என்ற எண்ணமும் சேர்ந்தது. ஆகவே தற்புகழ்ச்சியும், சுயநலமும் கூடிய சிலர் இங்கிலாந்தில் இந்தியாவுக்குச்சுதந்தரம் கொடுப்பதற்குரிய சீர்திருத்தங்களை வெகு தீவிரமாய் மறுக்கலானார்கள். இந்தியாவிலும் ஆங்கில உத்தியோகஸ்தர்களும், தற்போது அவர்களிடம் ஏராளமான செல்வாக்குள்ள வர்த்தகர் முதலான ஆங்கிலர்களும் தமக்கு லாபகரமானபடி சீர்திருத்தங்களை ஆக்ஷேபிக்கலானார்கள். ஆகவே சீர்திருத்தங்களை ஆக்ஷேபிக்கிறவர்கள் சங்கையும், பலமும் அதிகரிக்கலாயி

ற்று. இதன் மத்தியில் உலக யுத்தமும் முற்றுப்பெற்றது ஜர்மானியனை ஜயித்து விட்டோம் என்ற இறுமாப்பால் பலர் இந்தியச் சீர்திருத்தங்களை ஆக்ஷேபித்தார்கள். இந்தியர் உதவி இனித் தேவையில்லை யென்று இன்னும் சிலர் தம் உண்மையான புலித்தனத்தைக்காட்டினார்கள். எனவே சீர்திருத்தங்களுக்கு விரோதம் ஒரு தலைப்பட்டது. இஃதிங்ஙனம் இருக்க இந்தியாவின் ஸ்திதியைக் கவனிப்போம்.

***

இந்தியாவில் ராஜீய சீர்திருத்தங்கள் வேண்டுமென்று காங்கிரஸ் முதலிய சபைகளில் சென்ற 33 வருஷங்களாகக் கேட்டு வருகின்றனராயினும் சென்ற சில வருஷங்களாகத் தான் வெகு தீவிரமாயும் உற்சாகமாயும் இந்தியாவுக்குச் சுயாட்சி வேண்டுமென்று வற்புறுத்தி வருகின்றனர். தபஸின்பலத்திற்குத் தக்கவாறு தான் பலனுடைய சீக்கிரமும் அதிகமும் என்றபடி கிளர்ச்சி அதிகமாக இந்தியா மந்திரியும் இந்தியாவானது சுதந்திரம் பெறுதற்கு முக்கிய படியாக சில சீர்திருத்தங்கள் செய்யப்படும் என்று வாக்களித்தனர். இது எல்லா வற்றிற்கும் முக்கிய காரணஸ்தர் மாது ஸ்ரீ அன்னிபெஸண்டம்மாள் தான் என்பதை அவர் விரோதிகள்கூட ஆக்ஷேபிக்கமாட்டார்கள். ஆனால் வெகு சீக்கிரத்தில் சிஷ்யர்கள் குருவுக்கு முந்தியவர்களாய் விட்டார்கள்.

***

தூங்கிக்கொண்டிருந்த சீடர்களை குருவானவர் தட்டி எழுப்பி ஒரு இடத்தைநோக்கி ஓடுங்கள் என்று சொல்லித் தானும் முந்தி ஓடினார். சீடர்களும் துயர்ந்து ஓடினார்கள். ஓடஓட வேகமும் அதிகரித்தது. சீடர்கள் ஓடவேண்டியது தான் தங்கள் தருமமென்றும் தங்களுக்கு முன்னால் ஓடவேண்டியது குருவின் தருமமென்றும், எண்ணலானார்கள். குருவானவர் நிற்கவேண்டிய சமயம் வந்து விட்டது நில்லுங்கள் என்று உரக்க உத்திரவிட்டார். ஆனால் சீடர்கள் நிற்காமல் ஓடத்தலைப்பட்டார்கள். மேலும் குருசொல்வது தவறு என்றும், அவர் தெரியாத்தனத்தால் நிற்கச்சொல்

னாகிறார் என்றும், அவருக்குக் கூர்கெட்டு விட்டதென்றும், வெகு வாசாலமாய்க் கூறிக்கொண்டே ஓடினார்கள். தமக்குள் வெகு வேகமாய் முதலில் ஓடி வெகு வாசாலமாய்ப் பேசினவரைத் தயக்குக் குருவாய் வரித்தார்கள். நாம் உண்மையாய் உத்தேசித்து ஓடத்தலைப்பட்டோமே அந்த உத்தேசம் தவறிவிடுமே ஆகையால் நில்லுங்கள் என்று இரங்கிக் கூறினார். அதுபோனால் போகட்டும் ஓடினால் போதும் என்று புதுக் குருவும் சீடர்களும் கூறிக்கொண்டே ஓடினார்களாம். இது போலிருக்கின்றது நம் இந்தியா கதி.

***

1918௵ சப்டம்பர் மாதம் வரையில் ஒரு விதமான கட்டுக்குட்பட்டிருந்து இந்தியரனைவரும் ஒருங்கு சேர்ந்து செல்லவேண்டும் என்று எண்ணங்கொண்டிருந்தார்கள், அதற்குப் பிறகு ஓட்டத்தில் பிரியமுள்ள பெரும்பாலர் மற்றவர்களை மதியாது தம்முடைய சங்கை அதிகமாயிருந்தால்போதுமென்று ஒரே ஓட்டமாய் ஓடத்தலைப்பட்டார்கள். ஆகையால் நமது எதிராளிகள் சொல்லத்தொடங்கியது என்னவென்றால் 1918௵ டிசம்பர்மீ இறுதியில் நடந்த காங்கிரஸ் அபிப்பிராயமானது இந்தியாவின் அபிப்பிராயமில்லை. இந்தியர் ஒற்றுமை இல்லையென்று சொன்னார்கள். இவ்வளவு கிளர்ச்சிக்கும் காரணபூதரான மாது ஸ்ரீ அன்னிபெஸண்டம்மாளை அநேகமாய் அவதூறாய்ப் பேசி இகழ்ந்து வெறுக்கலானார்கள். இதைக்கண்டு நமது எதிரிகள் சந்தோஷமடைந்தார்கள் இங்கிலாந்தில்போய் இவ்வோட்டப்பிரியர்கள்கூட பேசுவதற்கு உதவியாயிருப்பவர் நமது அன்னையார் என்பதையும் இவர்கள் மறந்தார்கள்.

***

ஆனால் இவர்கள் எவ்வளவு அவதூறாய்ப் பேசினாலும் இந்தியாவுக்காக உழைப்பதை நமது தலைவர் விடப்போகிறதில்லை. இவர்கள் மெச்சுதலுக்காக வேலை செய்தால் அல்லவோ இகழ்தலுக்காக வேலையை நிறுத்தவேண்டும்? தமது

குருநாதருடைய ஜன்மபூமி யென்றும் தமது குருநாதருடைய ஆஞ்ஞையென்றும் உழைப்பவருக்கு அம்மஹானுடைய குளிர்ந்த பார்வையே போதிய கைம்மாறல்லவா? ஆகையால் நமது தலைவர் இந்தியாவுக்காக வேலை செய்வதற்கு இங்கிலாந்துக்குச் சென்றிருக்கின்றனர்.

***

ஒட்டப்பிரியர்களான வாசாலகர் அநேகர் உரக்கப்பேசினும் இந்தியரில் பெரும்பாலர் நமது தலைவர் செய்த முயற்சியில் நம்பிக்கை கொண்டவர்களாய் அவரையே இந்தியாவின் காரியசித்திக்கு முக்கிய ஊன்றுகோலாய் நம்பியிருக்கின்றனர். இந்தியாவின் காரியம் சித்திபெறுமாறு இறைவன் அருள் புரிவாராக! எதிராளிகள் ஒரு தலைப்பட்டு அணிவகுத்து நிற்பதைப்பார்த்தாவது நமது ஒட்டப்பிரியர்களுக்கும் மற்றவர்களுடன் ஒற்றுமையை நாடி இந்தியாவின் காரியசித்தியைத தேடும்படிக்கு அவர்களுக்கு நற்புத்தி யுண்டாகுக! ஒருக்காலும் ஒரு கட்சிக்குள் வேற்றுமைப் படலாகாது. வேற்றுமைப்படின் அபஜயம் நிச்சயம் என்பதை உணர்வாராக! உண்மையான சிநேகிதன் யார் யென்பதை சீக்கிரம் அறிவாராக!

***

இங்கிலாந்தில் தொழிலாளிகளே இந்தியாவுக்கு நீதி செலுத்தவேண்டுமென்று அவாவுள்ளவர். அவர்களின பிரதிநிதியாகிய ஸ்ரீமான் ஸ்கா இதற் கெனவேவந்து நமது அன்னிஸ்யைக் கூட்டிச் சென்றிருக்கிறார். இங்கிலாந்துக்குச் சென்று அங்குள்ள ஜனங்களுக்கு இந்தியாவின் உண்மை நிலைமையைப்பற்றி அம்மையவர்கள எடுத்துக்கூறி நமக்கு அநுகூலம் கிடைக்கும்படி செய்வார் என்பது திண்ணம. இவரை வெறுப்பவருக்கும் இவர் உதவிபுரிவார் என்பது திண்ணம். ஏன எனில் அவருக்கு வெறுபபேபது?

***

நமது தலைவர் இந்தியாவில இல்லாதிருக்கும் வரை நமக்கு பெரும் வியசனமதான் ஆனால் அதைவிடப் பெரும் காரியத்தைச் சாதிக்கச் சென்றிருக்கின்றனரர்தலால் நாம் அவருடைய சீக்கிரவரவை எதிா பார்தது நிற்போம்

ஆர். ரெங்கஸ்வாமி ஐயர்.

பிரஹ்ம ஞான தரிசனம் (பாலபாடம்).

அத்தியாயம் 42.

எண்ணத்தின் சக்தி—தொடர்ச்சி.

எண்ணங்களெல்லாம் பொருள்களென்னும் விஷயம் ஆதிகாலம் தொடங்கி இதுவரை ஞானிகளுக்கு நன்ருய்த் தெரியும். ஆனுல் சாமானிய ஜனங்களுக்கு இதன் உண்மையை ருசுப்படுத்துவது மிகவும் கஷ்டம்.

பிரஹ்ம ஞான சபையைச்சேர்ந்த வாலிபர்கள் இவ்விஷயத்தையும் ஞானசம்மந்தமான இதர விஷயங்களையும் இலகுவாயும் சந்தோஷமாயும் கற்றுக்கொள்வதில் பூர்வ ஜன்மத்தில் அவர்கள் செய்த சத்கர்மத்தின் பலனை அடைந்திருக்கிருர்கள்.

முற்காலங்களில் இவ்விஷயங்களைப்பற்றி ஒருவன் பேசினுலும் அவனை உபத்திரவப்படுத்துவதும் இடம் விட்டு இடம் துறத்துவதும் கொல்லுவதும் வழக்கம். இச்சிறு புஸ்தகத்திலுள்ள சொற்ப விஷயங்களைப்பற்றிக்கூட எழுதுவது மரண தண்டனைக்குக்காரணமாகும். இக்காலததிலோ எண்ண உருவங்களைக்காட்டும் படங்களடங்கிய புஸ்தகங்கள் பிரஹ்ம ஞான சபையார்களால் வெளியிடப்பட்டு உலகமுழுவதும் பரவியிருக்கின்றன. சொற்பப் பணததிற்கு வர்ணம் பூசிய எண்ணப்படங்களையும் மனிதனுடைய பிரபையைக் காட்டுகிற பலவர்ணங்களுடன் கூடிய உருவத்தையும் எழுதி அச்சிட்டிருக்கிற புஸ்தகங்களை யாரும் வாங்கலாம். விசேஷமாய் இவ்விஷயத்தைப்பற்றி மாது ஸ்ரீ பெசண்டு அம்மையவர்களாலும், ஸ்ரீமான் சார்லஸ் லெட்பீடர் அவர்களாலும் அநேக வர்ணங்களுள்ள பல படங்களுடன் ஒரு

புஸ்தகம் எழுதப்பட்டிருக்கின்றது. இந்த அத்தியாயத்திலும் இதர அத்தியாயங்களிலும் எண்ண உருவங்களைப் பற்றி எழுதியிருக்கிறவைகளை இப்புஸ்தகங்கள் உங்களுக்குத் தெளிவாய் விளக்கும்.

எண்ணங்கள் உண்மையாகவே பொருள்களென்பது திவ்விய திருஷ்டியுள்ள மனிதர்களாலும் ஸ்திரீகளாலும் அனேகம் தடவைகளில் நன்ருய் ருசுப்படுத்தப்பட்டிருக்கின்றது. திவ்விய திருஷ்டியென்பது சாமானிய ஜனங்களுடைய திருஷ்டிக்கு மேற்பட்டது. அதனுல் வெகு தூரத்திலுள்ளவைகளையும் வெகு நுட்பமானவைகளையும் அறியக்கூடும். திவ்விய திருஷ்டியுள்ளவர்கள் இக்காலத்தில் அநேகா இருக்கிருர்கள். அநேக காரணங்களால் அவர்களுடைய தொகை வரவர விருத்தியாகிக் கொண்டு வருகிறது. இக்காலத்தில் திவ்விய திருஷ்டியென்பதில் விஸ்தாரமான நம்பிக்கை யேற்பட்டிருக்கிறது. ஆகையால் இந்தத் திருஷ்டியையுடைய ஜனங்கள் இதை விருத்திசெய்தும் சாதகம் செய்தும் வருகிருர்கள். சில நூற்ருண்டுகளுக்கு முன் ஒரு நூற்ருண்டுக்கு முன்கூட, ஜனங்கள் இதை நம்பினதில்லை. சிலர் இதை நம்பிஞலுங்கூட இது தீமையுள்ள சக்தி யென்றும் பிசாசினுல் கொடுக்கப்படுகிற தென்றும் நினைத்து இதை மறுதளித்து நசிக்கும்படி செய்துவிட்டார்கள்.

இது மாத்திரமல்ல. தங்கள் சொந்தஸ்வபாவத்தையும் தாங்கள் வசிக்கிற உலகத்தின் ஸ்வபாவத்தையும்தம்முடன் கூட வசிததாலும் கண்ணுக்குப்புலனுகாத ஜீவர்களின் இரகசியத்தையும கற்றுகமொள்ளுவதற்காக பலர் அப்பியாசம் செய்து வருகிருர்கள். இவ்வித வித்தியார்த்திகளில் அநேகர் வர வர அந்தத் திவ்விய திருஷ்டியையடைந்து தங்களுடையவும் இதரர்களுடையவும் எண்ண உருவங்களைப் பார்கும் சக்தியை அடைகிருர்கள். நாமும் அவர்களைபோல் சிரமப்பட்டால் அவ்வுருவங்களைப் பார்க்கக் கற்றுக்கொள்ளலாமென்று சொல்லுகிருர்கள்.

அவர்கள் நேரில் பார்த்து விவரித்துச் சொல்லி யிருப்பதையும் அப்பால் படமாக எழுதி வர்ணமி ட்டுமிருக்கிற எண்ண உருவங்களையும்பற்றி இதனடியில் சொல்லி யிருக்கிறோம். அன்புள்ள ஒரு எண்ண மானது அழகான ஆழ்ந்த சிகப்புள்ள ரோஜாப்புஷ்ப த்தின் நிறமுடையதாயும் அநேகவித உருவமுள்ளதா யுமிருக்கும். தூரத்திலுள்ள சிறுகுழந்தையை நோக்கி தாயார் அனுப்பின அவ்வித எண்ணமானது தங்க நிறம் போல் ஜ்வலிக்கிற வட்டமான வளையம்போலும் அவ்வளைய த்தின் இருபுறமும் ரோஜாவர்ணமுள்ள இரண்டு இறக்கை கள் சேர்க்கப்பட்டுமிருந்தது.

இதே விதமாய் அனுப்பப்பட்டவேறொன்று சிவந்த பிரகாசமுள்ள ஒரு அம்புபோலும் அதன் அடிபாகம் சிறு த்தும் மேல்பாகம் அனேக கிரணங்களுடன் பரவிக்கொ ண்டும் அதன் உச்சியில் ரோஜா நிறமுள்ள சிறுதேவதை போன்ற உருவத்துடனுமிருந்தது. இவ்விரண்டு எண்ணங் களும் வெகுமைல்கள் தூரத்திலிருந்த குழந்தைகளிடம் ஒரு க்ஷணநேரத்திற் போய்ச் சேர்ந்தன.

அவைகள் அக்குழந்தைகளுடன் போய்ச்சேர்ந்தவு டன் அவர்களுக்கு இன்பமான முகமலர்ச்சியையும் அவர் களுடைய தாயாரைப்பற்றி அன்புள்ள எண்ணத்தையும் உண்டாக்கின. அன்புள்ள எண்ணங்களை யனுப்புகிறவர்க ளும் அவைகளைப் பெற்றுக்கொள்ளுகிறவர்களும். எண் ணங்களின் சக்தியைக்குறித்து அவர்கள் ஒன்றும் தெ ரிந்து கொள்ளா விட்டாலும் கூட மிகுந்த உதவியைச் செய்கிறார்கள்.

வி. வெங்குசாமி ஐயர்.

சகோதர பாவம்.

அடையாறு என்னும் ஸ்தலமானது இக்காலத்திய புண்ய க்ஷேத்திரங்களில் ஒன்று. நமது தேசத்தில் உள்ள பிராசீனபுண்ய க்ஷேத்திரங்களைப் போலவே பவித்திரமுள்ளது. பூர்வத்தில் மஹாத்மாக்கள் தபஸைச் செய்த ஸ்தலங்களே இப்பொழுது புண்ய க்ஷேத்திரங்களென்பதாகப் பாவிக்கப்பட்டு வருகின்றன. இப்பொழுது அடையாற்றில் வசிப்பவர்களெல்லாம் ஸாதுக்கள். பகவத் பக்தி, பூததயை, லோகோபகாரம் இவைகள் அவர்களின் மனோ வாக்குக் காயங்களின் தர்மங்களாயிருக்கின்றன. அவர்களில் அனேகர்கள் அருணோதயத்தில் எழுந்திருந்து ஸ்நானாதி கார்யங்களை முடித்துக்கொண்டு பரிசுத்தர்களாகி ஈசுவர தியானத்தைச் செய்கிறார்கள். ஆஹாராதிகளில் நியமமுள்ளவர்கள். இந்திரிய மனோ நிக்கிரஹங்களை அனுஷ்டிப்பவர்கள். ஸத்கிரந்தங்களைப் பிரசுரம் செய்வதாலும் உபன்யாஸத்தாலும் உலகத்திற்கு ஞானோபதேசத்தைச் செய்பவர்கள். சிலர் பாலர்பாலிகைகளின் வித்யாபிவிருத்திக்காக பாடுபடுபவர்கள்; சிலர் லௌகிக வியவஹாரங்களில் பிரஜா சௌக்கியத்திற்காக யத்தினிப்பவர்கள். சிலர் ஹிந்து ஸ்திரீகளின் புரோவிருத்திக்காகப் பாடுபடுபவர்கள். எல்லோரும் ஏதோ ஒரு விதமான மானிட சேவையைச் செய்பவர்வர்கள். அந்த க்ஷேத்திர ஸேவையே ஸர்வபாபக்ஷயகரமானது. அங்குவசிக்கும் புண்ய புருஷர்களின் தரிசனம் சிரேயஸ்கரமானது.

திவ்யஞான ஸமாஜத்தாருடைய தீக்ஷை ஸர்வசகோதர பாவம், சகோதரபாவமென்றால் ஸர்வ பூததயையென்பதாக நமது சாஸ்திரங்களில் சொல்லப்பட்டிருக்கிறது. சகோதரபாவமுள்ளவர்கள் தேச பேதங்கள் ஜாதி பேதங்கள் மத பேதங்கள் லிங்க பேதங்கள் இவைகளைப் பாராட்டாமல், எல்லோரிடத்தும் ஸமபுத்

தியுடையவர்களாயிருப்பார்கள். இந்த பாவத்தையே பகவான் பகவத் கீதையில் "வித்யாவினய ஸம்பன்னனுனவ பிராமணனிடத்தும், பசுவினிடத்தும், யானையினிடத்தும், நாயினிடத்தும், நாய் மாம்ஸத்தைப் புசிக்கும் சண்டாளனிடத்தும், ஞானிகள் ஸமதிருஷ்டியுடையவர்களாயிருப்பார்களென்று ஸாதித்திருக்கின்றனர். திவ்யஞான ஸமாஜத்தார் அவ்வித ஸமதிருஷ்டியுள்ளவர்கள். அவர்களுக்குப் பேதபுத்தி இல்லை.

மனிதர்களிடம் ஏற்றம் குறைச்சல்கள் இல்லையென்பதாக அவர்கள் அபிப்பிராயமன்று. மனிதர்களின் சரீரபலத்திலும் புத்தி பலத்திலும் குணத்திலும் எண்ணிறந்த தாரதம்மியங்களிருக்கின்றன. ஆயினும் இவையெல்லாம் அநித்தியமான பாஹ்ய விஷயங்களில் தோன்றும் பேதங்கள், மனிதர்களிடம் அந்தர்யாமியாயுள்ள பகவதம்சமான ஆன்மா எல்லோரிடத்தும் சமமாயிருக்கும். ஏற்றம் குறைவுகள் ஆன்மாவுக்கு இல்லை. அது நித்யமானது. நாசமில்லாதது.

கீதை அத். 15 சு. 28ல் ஸமஸ்த பூதங்களிடத்தும் பரமேசுவரன் ஸமமாக இருக்கிறார் என்பதாகவும் மற்றவை யெல்லாம் நசிக்கும் அது நசிக்காதென்பதாகவும் இந்தத் தத்துவத்தை அறிந்தவனே ஞானி என்பதாகவும் பகவான் சாதித்திருக்கிறார்.

திவ்யஞானிகள் அநித்தியமான பாஹ்ய விஷயங்களைப் பாராட்டாமல் நித்தியமான ஆத்ம வஸ்துவின் மீதே திருஷ்டி வைப்பார்கள்.

அவர்களுக்கு மதபேதங்களில்லை. ஸர்வ மதங்களும் பகவதாக்ஞையால் ஏற்பட்ட உபதேசங்கள். எல்லாமதங்களும் பகவத் ஸன்னிதானத்தை யடைவதற்கு வழிகள். ஸாரமாயுள்ள சித்தாந்தங்களெல்லா மதத்திலும் ஒரே தன்

மையுடையவைவயா யிருக்கின்றன. பேதங்களில்லை. வெளி ஆசாரங்களில் மாத்திரமே சில பேதங்கள் காணப்படுகின்றன. ஆனாலும் அவைகளால் கார்யம் ஒன்றுமில்லை.

கீதை அக். 4 சு. 11ல் எவர்கள் எவ்விதமாக என்னை பஜிப்பார்களோ, அவர்களை அவ்வழியிலேயே அனுக்கிரகிப்பேனென்றும் மானிடர்கள் அவலம்பிக்கும் மார்க்கங்களெல்லாம் என்னுடைய வழிகளே யென்பதாகவும் பகவான் சாதித்திருக்கிறார்.

பிறமதத்தாருடைய வேதங்களெனச் சொல்லப்படும் பௌத்த கிரிஸ்தவ மஹம்மதிபாதி மதக்கிரந்தங்களிலும் வேதோக்தமான சித்தாந்தங்களிருக்கின்றன. மதத்வேஷத்திற்காகட்டும், சொந்தமதத்தைவிட்டு அன்யமதத்தைக்கைகொள்வதற்காகட்டும், காரணங்களில்லை. இன்னும் ஸநாதன தர்மத்தில் மதத்திரயத்திற்கும் முக்கிய சித்தாந்தங்களில்பேதமில்லையென்பதாக வேறாகச் சொல்லவும் வேண்டுமோ? துவைத அத்துவைத விசிஷ்டாத்துவைதங்களுக்கு நாம மாத்திரம் பேதமே யொழிய ஸாரம் ஒன்றாக இருக்கின்றது. மதத்துவேஷம் கூடாது. பரமத தூஷணம் சரியன்று.

சொந்த மதத்தில் சிரத்தையும் பரமதத்தை தூஷியாதிருத்தலும் உத்தமதர்மம் என்பதாகப் பாகவதம ஏகாதச ஸ்கந்தத்தில் சொல்லப்பட்டிருக்கிறது.

தேசபேதமும், ஜாதி பேதமும், சரீர சம்பந்தப்பட்டவை. ஜீவன் எந்த தேசத்தில் ஜனிப்பானோ எந்த ஜாதியில் பிறப்பானோ அந்த தேசஸ்தனென்பதாகவும் அந்த ஜாதிக்காரனென்பதாகவும் அந்த ஜன்மத்தில் வியவகரிக்கப்படுவான். அதைப்பற்றி ஜீவனுடைய பரிபக்குவம் இவ்வளவென்றுவது ஞானம் இப்படிப்பட்டதென்றுவது ஏற்படமாட்டாது. ஞானவான்கள் தர்மாத்மாக்கள் எல்லா தேசத்திலும் எல்லா ஜாதியிலும் இருக்கிறார்கள். அவ்விதமே அஞ்ஞானிகளும் பாபிகளும் எங்கும் இருக்கிறார்கள். இந்த ஜன்

மத்தில் ஒரு தேசத்தில் ஜனித்தவன் மறு ஜன்மத்தில் வேறொரு தேசத்தில் ஜனிப்பான். இப்பொழு ஒரு ஜாதியில்து பிறந்தவன் வேறு ஜன்மத்தில் வேறொரு ஜாதியில் பிறப்பான். தேச, ஜாதி பேதங்கள் கேவலம வெளி பேதங்களே ஒழிய அவைகளிடம் எம் மாத்திரமேனும் ஸாரமில்லை.

ரிணானுபந்த நிமித்தம் ஜீவன் ஓரோர் காலத்தில் ஓரோர் தேசத்திலும் ஓரோர் ஜாதியிலும் ஜனிப்பான். எத்தேசத்தாரை யாகட்டும எந்த ஜாதியாரை யாகட்டும் நாம் அதிகமாக துவேஷிப்போமாளுல ஜன்மாந்தரத்தில் நாம் அந்த தேசத்தில் அந்த ஜாதியில் பிறப்போம்.

இன்னும் ஸ்திரீபுருஷ பேதமோவென்றால் அதிகபுத்தி மோஹத்தை உண்டாக்குவதாயிருக்கிறது. நமது தேசத்தில் மாத்திரமேயல்லாமல உலகத்தில சகல தேசங்களிலும் புருஷ ஜாதி ஆதிக்ய மெனபதாகவும் ஸ்திரீகள் தாழ்ந்தபடியில் சேர்ந்தவர்கள் என்பதாகவும் பிரபலமான துரபிமானம வியாபித்திருக்கிறது. ஸ்திரீகளுக்கு ஸ்வதந்தரம கூடாதென்பதாகவும், ஸ்வச்சா விருததி கூடாதென்பதாகவும், ராஜரீகம முதலிய வியவஹாரங்களுக்கு அருகமில்லாதவர்கள எனபதாகவும ஜனங்களுககுள சாமான்ய அபிப்பிராயமாக இருக்கின்றது. இம்மூட அபிப்பிராயமானது நமது தேசததல விசேஷமாக வியாபிததிருக்கின்றது. பாலயத்தல் தாய்தகபபன் ஆதீனத்திலும யௌவனத்தில பர்த்தாவின்வசத்திலும் வார்த்திகத்தில புததிர ஸம்ரக்ஷணையிலும ஜீவிககவேண்டுமே ஒழிய ஸதிரீகளுக்கு எப்பொழுதும ஸ்வதந்தர ஜீவியம் கூடாதென்பதாக வாதிபபதும்அதற்கு தாம சாஸ்திர வாக்கியங்கள சிலவற்றைப் பிரமாணமாக உதஹரிப்பதும் ஸர்வ சாதாரணமாயிருக்கின்றது. ஸ்திரீகள அந்தப்புரததில் இருக்கவேண்டியவர்களே ஒழிய வீட்டைவிட்டு வெளி யேறபபடாதென்பதாகச் சிலரும அவர்களுக்கு வித்யாபபியாசம கூடாதென்பதாகச் சிலரும

அவர்களுக்கு உபநயனமாகட்டும் வேதாதிகார மாகட்டும் இல்லையெனபதாகச் சிலரும் இவ்விதம் பல பல விதங்களில் ஸதிரீகளின் நிகி நஷ்ட ஸ்திகி புருஷர்களாலேயேசொல்லப் படுகின்றது. இவையெல்லாம் அசாஸ்திரீய மென்பதாகத் திடமாகச் சொல்லக்கூடும்.

ஸ்திரீ புருஷர்கள் எல்லோரும் மானிட வர்க்கத் திற் சேர்ந்த ஜீவர்களாயிருக்கிறார்கள். ஜீவர்களிடத்து புருஷ ஜீவன் ஸ்திரீ ஜீவன் எனற பேதமில்லை. லிங்க பேதம் ஸ்தூல சரீரத்தில் ஏற்பட்டிருக்கிறதே ஒழிய, ஜீவனுக்கு ஸ்வதஸ்ஸித்தமாயுள்ள லக்ஷணமனறு. சூக்ஷ்ம சரீரத்தில கூட லிங்க பேதமில்லை. மேலும் ஒரு ஜீவனே ஒரு ஜன்மத் தில் புருஷ ரூபமாயும மற்றொரு ஜன்மத்தில் ஸ்திரீ ரூப மாயும ஜன்மததை அடையலாம. இப்பொழுது புருஷ ஜன் மம் எடுத்திருப்பவாகள் இதறகு முன எத்தனையோ ஸ்திரீ ஜன்மங்களைப் பெற்றவர்களாயிருப்பார்கள். இனி யும் எத்தனையோ ஸ்திரீ ஜனமங்களை எடுக்கவேண்டியவர் களாயுமிருக்கிறார்கள். அந்தப் பிரகாரமே இப்பொழுது ஸ்திரீ ஜன்மமெடுத்திருப்பவர்கள் சென்ற ஜன்மங்களில எத்தனையோ புருஷ ஜன்மங்களைப் பெற்றிருக்கிறார்கள். வருங்காலத்தில மீளவும் புருஷ ஜன்மத்தை யெடுப்பார்கள். லிங்கமானது அந்தந்த ஜனமததன் பிராரப்தங்களில் சே ர்நதது. சில தாமங்களைக் கற்றுக்கொள்வதற்கு புருஷ ஜனமமும் சில தர்மங்களைக் கறறுக்கொள்வதறகு ஸதிரீ ஜன்மமும அனுகூலமாயிருக்கும். இவ்வித அவசியத்தை உதாசித்து ஏறபடும் பேதங்களால ஸ்திரீகளை விட புரு ஷர்கள் சிரேஷ்டமென்பதை அங்கீகரிக்க அருகமாகமாட் டாது. பூர்வகாலததில நமது தேசத்தில் இவ்வித பேதபாவ ங்கள இருநததாகப் புலப்படாது. பூர்வத்தில் சில ஸ்திரீக ள் ராஜ்யாபிஷேகத்தைப் பெற்று ஆண்டு வந்தார்கள். சிலா பிரஹ்மத்தை அறிந்தவர்களாயானார்கள. துவிஜர்களில் ஸ்திரீகளுக்கு உபநயனாதி ஸம்ஸ்காரங்களும் வேதாத்ய யனமும் ஒருகாலத்தில் ஏற்பட்டிருந்தன. எல்லா விதத்

திலும் ஸ்திரீகள் புருஷர்களோடு ஸமானர்களென்ப தாக எண்ணப்பட்டார்கள். இப்பொழுது பிரத்யக்ஷ அனு பவத்தை ஒட்டி ஆலோசிக்கினும் புருஷர்களை விட ஸ்திரீ கள் புத்தி பலத்திலாகட்டும் கார்யத்தை நிர்வஹிக்கும் சக் தியிலாகட்டுமே குறைந்தவர்களன்றென்பதாகத் தோன்று கிறது. புருஷர்களுக்கு போதித்தபடி ஸ்திரீகளுக்கும் பூர்த் தியாக வித்தையைப் போதிக்கின் கிரஹிக்கமாட்டார்களா?

இப்பொழுது இங்கிலாந்து முதலான மேற்கு தேசங்களில் ஸ்திரீ ஸ்வதந்திரம் அங்கீகரிக்கப்பட்டு வருகின்றது. ராஜரீக வியவஹாரங்களில் கூட அவர்களுக்கு ஸ்வதந்திரம் கொடுக்கப்பட்டிருக்கிறது. நமது தேசத்தில் ஸ்திரீகளுக்கு வித்யாப்பியாஸத்திற்குத் தகுந்த நல்லஉபாய ங்களில்லாமலிருக்கின்றன. வித்யாவாசனை இல்லாதவர்கள் எவ்விதம் மேன்மையடைவார்கள்? ஸ்திரீ தர்மங்களும், புருஷ தர்மங்களும் வெவ்வேறாக இருக்கினும் உண்மை யில் ஸ்திரீ புருஷர்கள் ஸமானர்களென்ற பாவம் மனதில் திடமாக ஊன்றவேண்டும்.

இவ்விதமாய் பேதத்தைப் பாராட்டாமல் மானிட கோடியெல்லாம் ஒரு சகோதர வர்க்கத்தில் சேர்ந்தவர்க ளென்பதாக போதிப்பதே திவ்யஞான ஸமாஜத்தாரின் முக்கிய உத்தேசமாகும் கூடியமட்டில் அவற்றை அனுஷ்டி ப்பவர்களே ஸமாஜத்திற்குக் கீர்த்தியை அளிப்பவர்கள்.

ஏனங்குடி இராமசந்திர நாயுடு.

குறிப்பு:—இது தெலுங்குதிவ்யஞானதீபிகையினின்றுதமிழ்ப் படுத்தியது.

குழந்தைகளை அன்பால் ஆளுதல்.

பெற்றோருபாத்திமாரின் சங்கத்தின் முதலாவது துண்டுப்பத்திரிகையைப் படித்தோர் தேக சிக்ஷையென்ற அநாகரிகமான வழக்கத்தால் குழந்தைகளுக்கு நேரிடும் மிகுந்த கெடுதியை அறிவார்கள். இச்சங்கமானது எம்முறையை யாவரும் அனுசரிக்கவேண்டுமென்று கூறி அவ்விதமான அறிவைப் பரவச் செய்கிறதோ அம்முறையை அனுசரித்து வரும் சில பள்ளிக்கூடங்களில் எவ்விதமான கண்டிப்பு நடைபெறுகிற தென்று சில பிரத்தியக்ஷமான சான்றுகளை இப்பத்திரிகையில் எடுத்துக் காட்டுவோம். பள்ளிக்கூடங்களில் மாணுக்கர்கள் அருத்தத்தைக் கவனிக்காமல் யாவற்றையும் மனப்பாடம் பண்ணுகிற கெட்ட வழக்கமும் சம்பளம் பெறுவதற்காக ஒரு வழி யென்று மட்டும் சில உபாத்திமார் தம் தொழிலைக் கருதுகிற கெட்ட வழக்கமும், இவ்வுத்தியோகத்தின் பெருமையைக் கெடுத்துவிட்டன.

குழந்தைகளைக் கட்டாயப்படுத்தியும், பயமுறுத்தியும், தான செய்யவேண்டியவைகளைச் செய்யும்படி இதுவரை செய்து வந்த உபாத்திமார் கல்வி கற்பிக்கும் விஷயத்தில் அன்பின் சக்தியால் யாதாவது பயன் உண்டு என்பதைக் கூட மறந்து விட்டார்கள். இச்சங்கத்தில் அங்கத்தினராகச்சேரக்கூசுகிறார்கள். ஏன் என்றால் சரீர தண்டனை பண்ணுகிறதில்லை யென்று தங்களை நிர்ப்பந்தம் செய்துகொண்டால பள்ளிக்கூடங்களில் தங்கள் கடமையைச் செய்ய முடியாமல் போய்விடுமே யென்று பயப்படுகிறார்கள். இதுவரை பழகி வந்த முறைகளையும் எண்ணிவந்த எண்ணங்களையும் திடீரென்று விட்டுவிடுவதென்றால் கொஞ்சம் வயது முதிர்ந்தவர்களுக்கு மிகவும் சிரமம் தான். அதிலும் உயர் லக்ஷியங்கள் அற்றவர்களாயிருந்தால இன்னும் கஷ்டம். ஆனால் இனிமேல் பிரம்பைத் தொடுகிறதேயில்லை என்

றும் குழந்தைகளை நிர்ப்பந்தப்படுத்தி யாதொன்றையும் செய்யச் சொல்லுகிறதில்லை யென்றும் நிச்சயமாய் தீர்மானித்தால் ஒழிய, அவ்வுபாத்திமார் தன்னடக்கம், பொறுமை, யூகம், அன்பு, இவைகளின் அவசியத்தையும், உபயோகத்தையும் தக்கவாறு அறியமுடியாது. குழந்தைகளைத் தண்டிக்கிற எண்ணமே முற்றும் ஒழிந்தால் தான் மனமானது தர்மஸேவகத்திலும் ஆத்ம பரித்தியாகத்திலும் நன்றாய்ச் செல்லும். அப்போது தான் கைங்கரியம் செய்யவேண்டுவதே உண்மையான உபாத்தியாயருடைய கடமை என்று அறிகிறான்.

ஒரு முக்கியமான பள்ளிக்கூடத்தின் தலைமை உபாத்தியாயர் சொல்லுகிறார். "மனமுறண்டாகக் கோபத்தால் பையனைத் தண்டிப்பது ஒன்று, ஞாயமாக சரீர தண்டனை விதிப்பது என்பது மற்றொன்று. இரண்டையும் ஒன்று போல் பாவிப்பது பிசகு. இச்சங்கத்தார் இரண்டையும் கலந்து ஒன்று போல ஆக்ஷேபிக்கிறார்கள். அது சரியல்ல" என்று ஆக்ஷேபிக்கிறார். ஒரு பையனுடைய முதுகிலாவது பின் தட்டிலாவது ஞாயமான குறிப்பிட்ட இத்தனை அடிகள் சரியான பிரம்பினால் அடித்தால் அது நியாயமான தண்டனை யென்று இவ்வுபாத்தியாயர் அபிப்பிராயம். ஒவ்வொருவருக்கும் மரியாதை யென்பது உண்டு என்பதை இக்காலத்து மாணாக்கர்கள் விஷயத்தில் மறந்துவிட வேண்டுமென்று இவரது எண்ணம் போலும் இந்திய மாணாக்கர்கள் தங்கள் பிருஷ்ட பாகத்தை யாவரும் பார்க்கும்படி காட்டுவதானால் எவ்வளவு அவமானமாய்க் கருதுகிறார்கள் என்பதை இவர் அறியவில்லை. மனதிற்கு அருவருப்புண்டாவதுடன் மரணத்தைக்காட்டிலும் கொடிய அவமானமாய் எண்ணுகிறார்கள். சில சமயத்தில் தைரியசாலிகளாயும் பலசாலிகளாயும் உள்ள சிலர் இவ்வவமானத்திற்குட்பட இஷ்டமில்லாமல் மறுப்பதுடன் இவ்வித அருவருப்புக்கிடமான தண்டனையை விதிக்க வந்த உபாத்தியாயரை பலாத்காரமாய்

எதிர்த்துத் தடுத்திருக்கிறார்கள். அது தலைமை உபாத்தியாயருக்கு எவ்வளவு மரியாதைத் தாழ்வு அதிலும் மற்ற பையன்களின் முன்பாக! பள்ளிக்கூடத்துக்கும் அதன் தலைவருக்கும், அந்தப் பையனுக்குமே இது கெடுதியல்லவா? இவ்விதமாய்ச் சில சமயங்களில் இம்முறையானது பிரயோஜனமற்றுப் போவதுடன் கௌரவத்தையே கெடுத்து விடுகிறது. உபாத்தியாயருடைய பெருமை சரீர பலத்திலாயிருக்கிறது? மாணாக்கனுடைய மனதின் குற்றமும் ஒழுக்கப்பிசகும், சரீரத்தை சிக்ஷை செய்வதால் நீங்குமா? உண்மையான உபாத்தியாயர் தன்னுடைய மேன்மையான மாதிரியால் மாணாக்கனை ஊக்கமுள்ளவனாக்குகிறார். பயத்தினால் ஆளாமல் அன்பின் சக்தியால் ஆளுகிறார்.

அந்த ஆக்ஷேபகர் பின்னும் சொல்லுகிறார். "புத்திசாலி ஒருவன் உண்மையாக ஆங்கிலப் பொதுப் பள்ளிக்கூடங்களில் நடந்துவரும் நடபடிக்கைகளைப் பார்க்கட்டும். சரீர சிக்ஷை செய்வது அங்கு வழக்கமாயிருக்கிறதே. அங்கு ஏதாவது கெடுதல்கள் காணப்படுகின்றனவா என்று சொல்லட்டும்" என்று சொல்லுகிறார். மேற்கூறிய ஆக்ஷேபகர் வழக்கத்தின் பெருமையால் ஏமாந்து நெடுநாளாய் ஏற்பட்டுவரும் மாமூலால் மோசம்போய் இக்கெட்ட வழக்கத்தின் கெடுதியைப் பார்க்க முடியாமல் போகிறார். ஆனால் "டிரிங்" என்ற ஆங்கிலேயர் ஆங்கிலப் பையன்கள் தம் உபாத்தியாயரை தம் விரோதிபோல் பார்க்கிறார்கள் என்றும், விரோதியானவன் எக்கெடுதியைச் செய்தாலும் அது ஆக்ஷேபிக்க இடமில்லை யென்று நினைக்கிறான் என்றும் சொல்லுகிறார். உபாத்தியாயர்கள் ஒருபக்கம், பையன்கள் ஒருபக்கமாக இரண்டு பிரதி கக்ஷிகளிருக்கின்றன வென்றும், இரு திறத்தாருக்கும் பொதுவானது ஒன்றுமில்லை யென்றும், ஒருவொருக்கொருவர் ஜன்ம விரோதிகள் என்றும், அவர்களில் முந்தியவர் தம்முடைய அதிகாரத்தையும் பலத்தையும் உபயோகப்படுத்துவதும், பிந்தியவர் பொறுமையும், குயுக்தியையும் உபயோகப்படுத்து

வதும் நியாயம் என்றும் எண்ணுகிறார்கள். இது எவ்வளவு வருத்தத்திற்கு இடமாகிறது? வாழ்நாளுக்கு ஆயத்தம் செய்வதற்கு ஏற்ற முறை இம்முறையென்று எப்படிச் சொல்லுகிறதென்று இவர் கேட்கிறார். இவர் உண்மையைத் தெளிவாயுணர்ந்து தெளிவாய், ஒளியாமல் உரைப்பவராவர்.

நமது ஆக்ஷேபகர் மறுபடியும் அடியில்கண்டபடி தன் கொள்கையை நிரூபிக்கிறார். "இயற்கையாகவே வலியை உணரச் செய்ய நரம்புகள் நமக்கு ஏற்பட்டிருக்கிறதைப் பார்த்தால் கடவுளே அவ்வலியுணர்த்துவதையும் கற்பிக்கும் வழியில் உபயோகப்படுத்தவேண்டுமென்று சொல்லுகிறார் என்றே கொள்ளவேண்டும். ஒரு குழவியைக் கையால் தொட்டால் அது கொட்டுகிறது. ஆகையால் ஒரு குழந்தை குழவியைத் தொடக்கூடாதென்று அறிகிறது. அம்மாதிரியே அது நெருப்பைத் தொட்டால் சுடும் என்று அனுபவத்தால் அறிந்து கொள்ளுகிற"தென்று வாதிக்கிறார்.

ஆனால் தன் அதிகாரத்தைச் செலுத்த விரும்புகிற உபாத்தியாயர் குழந்தையை அடிக்கிறார். அக்குழந்தையும் இயற்கையாகவே உபாத்தியாயரை நேசிக்காமல் அவரிடம் விசுவாசம் வைக்காமலிருக்கிறது, எவ்விதம் தும்பியை குழந்தை வெறுக்குமோ அவ்விதமே உபாத்தியாயரையும் வெறுக்கும். தன்னுள்ளத்தில் உள்ளதை மறைக்கவும், பாசங்கு பண்ணவும் கற்றுக்கொள்ளுகிறது.

கவனமில்லாமல் நெருங்குபவரை சுரீர் என்று தாக்கும் ஒரு மின்சார யந்திரமா உபாத்தியாயர்? மின்சார யந்திரத்திற்கல்லவா யூகம், அன்பு, முதலிய இல்லை? உபாத்தியாயர் குழந்தையைச் செல்லவேண்டிய வழியில் செலுத்தவேண்டிய வழிகாட்டியல்லவா? அபாயகரமான துறைகளில் செல்லாதபடி உணர்த்தும் மனச்சாக்ஷிக்குப் பதிலாக வெளியில் காணப்படும் பிரதிநிதியென்று சொல்லவேண்டும். புத்திசொல்வதும், எச்சரிப்பதும், இவ்விதமான செய்கையைச்செய்தால் இன்னதீங்கு நேரிடும் என்று

நன்றாகக் குழந்தை அறியுமாறு உணர்த்தலும், தன்னுடைய உள்ள உறுதியைக் குழந்தையை பிரம்பாலடித்தலில் உபயோகிக்காமல், கற்பனையினாலும் போதனா சக்தியினாலும் குழந்தையை மேம்பாடுறச் செய்வதில் உபயோகித்தலும், உபாத்தியாயருடைய கடமையாகும். அப்படிச் செய்தும் குழந்தை தவறலாம். அதனால் அதன் இயற்கையான பயனை அடையலாம். அப்படியானால் தன்னுடைய கோபத்தாலும், முரட்டுத்தனத்தாலும், குழந்தையை மறுபடியும் வருத்தப்படுத்துவது சரியல்ல. ஆனால் இந்தக் காரணத்தால் இத்தீங்கு விளைந்தது என்று அமைதியாய் காரணத்தை அறியச் செய்வதும், பெரியோர் அறிவைக் குழந்தை பெறும்படி செய்வதும் பெற்றோருடையவும், உபாத்தியாயருடையவும் கடமையாகும்.

இயற்கையில் ஆடு மாடு முதலிய விலங்குகள் வருத்தத்தின் தாக்குதலால் தான் அறிவைப் பெறுகின்றன. மனிதனும் அப்படியே. ஆனால் மனிதனுக்கு காரண காரியத்தை யறியும் சக்தியிருப்பதால் அவன் அறிவைச் சீக்கிரம் விருத்தி செய்ய இடமிருக்கிறது. ஆகையால் உபாத்தியாயருடைய வேலை யென்னவென்றால், இவ்வறிவையும், தன்னடக்கத்தையும் குழந்தையை விருத்தி செய்யும்படி செய்யவேண்டும். வேண்டுமென்று மற்றொரு ஜீவனுக்குத் துன்புறுத்தல் என்ற கொடுமையைச் செய்வது கூடவே கூடாது. தன்னுடைய அபிவிருத்தியைக் கருதியும் உபாத்தியாயர் அறியவேண்டியது என்னவென்றால், "உயிருள்ள பிராணிக்கு துன்புறுக்கவேண்டுமென்று கருதிச் செய்யும் துன்பமானது எல்லா பாபங்களிலும் கொடுமையானது. அது மனிதனுடைய செயலல்ல பிசாசின் செயலாகும்." பிரம்பினால் அடித்தல் இப்பாபத்தில் அடங்கியது. ஒரு பையனுடைய மனதைப் புண்படுத்தவும் அவனுடைய மரியாதையை குலைக்கவும் கருதிச் சொல்லப்பட்ட வார்த்தையும் செய்யப்பட்ட செய்கையும் இப்பாபத்தில் அடங்

கியவையாகும். சில தேசங்களில் சரீர தண்டனை விதிக்கக்கூடாதென்று சட்டமே தடை செய்கிறது. ஆனால் பெரும்பான்மையாக பலதேசங்களில் அப்படிச் சட்டமேற்படவில்லை, வழக்கத்திலும் சரீர தண்டனை விதிக்கப்பட்டே வருகிறது. இது வழக்கமாயிருக்கிறதென்று சொல்லிக் கொண்டு அநேக உபாத்தியாயர் இவ்விரக்கமற்ற செய்கையைச் செய்துகொண்டு வருகின்றனர். இதனால் தங்கள் உத்தரவாதம நீங்குமாம்! அநேகர் செய்கிறார்கள் என்பதனால் குற்றம் குற்றமாகாமல் போகுமா? வழக்கமாயிருக்கிறதென்று கர்மமானது விடுமோ? விடாது. கொடுமை விளைத்தல் என்ற பாபத்தின் கர்மமானது எல்லா பாபத்தின் கர்மத்திலும் மிகக்கொடியது. அஹிம்சைதான் முக்கிய தர்மம் என்று இந்தியாவில் யாவருக்கும் தெரியும். ஆகையால் இம்மாதிரியான வழக்கங்கள் இந்தியாவில் நடைபெறுவது கொஞ்சமும் சரியல்ல.

மாது ஸ்ரீ அனிபெஸண்டம்மையும் அடியில்கண்டபடி எச்சரித்திருக்கிறார். அதை நாம் அடிக்கடி ஞாபகப்படுத்திக்கொள்ளவேண்டும் "அடித்தலால் தண்டிக்கப்படும் குழந்தைக்கு தேகத்தில் வலி யுண்டாவது மட்டுமல்ல அவனுடைய மனதிற்கும் தீங்கு உண்டாகிறது. தன்னைவிட பலக்குறைச்சலுள்ளவரிடத்தில் அதிருப்தி யடைந்தால் அவ்வதிருப்தியைக் காட்டச் சரியான வழி அவரை அடித்துத் தொந்தரவு பண்ணுகிறதுதான் என்று எண்ணி அவ்வாறே செய்யக்கற்றுக்கொள்ளுகிறான். தான் செய்த தவறைப்பற்றிப் பச்சாத்தாபப்படுவதும் அடிப்பவர் பேரில் உண்டாகும் கோபத்தால் தடைபடுகிறது. அவன் மனதில் எப்படியாவது தன்னை யடித்தவருக்கு மாறு தீங்கு செய்ய வேண்டுமென்ற எண்ணமும் உதிக்கிறது. வலியைப் பொறுக்கமுடியாத பையனாகவிருந்தால் தன்னுடைய தவறுவெளிக்கு வந்தால் தனக்கு அடி விழுமென்று பயந்து பாசாங்குபண்ணக் கற்றுக்கொள்ளுகிறான். தெரியாத்தனத்தினாலாவது பயத்தினாலாவது தான் பொய் சொல்லும் சுபாவம்

அதிகரிக்கும். தண்டனையானது குழந்தையின் தெரியாமையை அதிகரித்து குழந்தையைக் கலக்கமுறச் செய்கிறது. பயத்தை அதிகரிக்கிறது. குழந்தையின் தவறுதல்களை மாற்ற ஏற்ற வழி யென்னவென்றால், பெரியவர்கள் அக்குழந்தையின் தவறுக்கு எதிரான குணத்தை வெளியிடுவதாலும், அவர்கள் குழந்தையிடம் நம்பிக்கையையும் மரியாதையும் காட்டுவதாலும் குழந்தையின் தவறுகளை மாற்றலாம். குழந்தை தன்னால் கூடியவரை முயன்று சரியென்று தான் ஒரு காரியத்தைச் செய்திருக்கிறான் என்று நம்பவேணும். குழந்தை சொல்லும் வார்த்தையை ஆக்ஷேபம் செய்யாமல் ஒத்துக்கொள்ளவேணும். அவனை ஒரு கண்ணியமுள்ளவனாகவே கருதி மரியாதையாய் நடத்தவேண்டும். குழந்தையின் மரியாதையை ஒருக்காலும் குறைக்கலாகாது. அவன் ஒருக்கால் பொய் சொன்னாலும், அவனிடம் அடிக்கடி நம்பிக்கையைக்காட்டி வரவேண்டும். கடைசியில் அவன் சத்தியவானாய்விடுவான்.''

மேற்கூறிய ஆக்ஷேபகரையும் அவரைப்போன்று அடித்துவளர்த்தலேசரியானமுறையென்ற கொள்கையுள்ள மற்றவர்களையும் இச்சங்கத்தாரால கூறப்படும் விஷயங்களைக் கவனிக்கும்படி வேண்டுகிறோம். உலகப்பிரசித்திபெற்ற மனத்தத்துவசாஸ்திரியான உவில்லியம் ஜேம்ஸ் கூறும் புத்திமதியையும் ஸ்ரீ ஜார்ஜ் அருண்டேல் என்பவர் மாணுக்கர்களைத் தனித்தனியே முன்னேற்றிவைக்கும முறையைப் பற்றியும் கூறியிருப்பதையும் கவனிக்கவேண்டும். அவைகளைப்படித்து தங்களுடைய அன்பு சுபாவத்தை விருத்தி செய்ய பழகுவார்களாக.

ஆர். கே. குலகர்ணி.

ஆத்மார்த்தக் கல்வி அவசியம்.

1 "கற்கக்கசடறக்கற்பவை கற்றபினிற்கவதற்குத்தக"

என்று திருவள்ளுவநாயனார் அருளியிருப்பதில் "கற்பவை" என்பது அறம், பொருள், இன்பம், வீடு என்ற நான்குவித புருஷார்த்தத்தை உணர்த்துவதாக ஆன்றோர் அபிப்பிராயம். அர்ஜுனனுக்கு பகவான் ஸ்ரீ கிருஷ்ணன் யுத்தகளத்தில் கீதையை உபதேசித்திருக்கிறார். கீதையிலும் இஹத்திற்கும், பரத்திற்கும் வேண்டிய தத்துவங்களே உபதேசிக்கப்பட்டிருக்கின்றன. இவைகளினால் கற்பித்தலானது இஹத்திற்கும் பரத்திற்கும் வேண்டிய விஷயங்களையே கற்பிக்க வேண்டுமென்பது பெரியோர்களுடைய கருத்து.

2. ஆத்மார்த்தமான உலகுவேறு, லௌகிக உலகம் வேறு என்றும் அவைகளுக்குள் பரஸ்பரம் ஸம்பந்தமில்லையென்றும் சாதாரண ஜனங்களும், மதப் பயிற்சி உள்ள வித்வான்களும் இப்பொழுது அபிப்பிராயப்பட்டு வருகிறார்கள். ஆனால் முற்காலத்திய உபாத்தியாயர்கள் இவ்வுலகு முழுமையும், ஈசுவரனுடைய பிரபஞ்சமென்றும், உலகவாழ்க்கையில் சுவர்க்கம், நரகம், இவைகள் இடம் வேறுபட்டு இருக்கவில்லையென்றும், பிரபஞ்சத்தில் ஈசுவரனில்லாத இடம் கிடையாதென்றும் அவர் நினைவுக்கும் உணர்வுக்கும் அகப்படாத விஷயமும் கிடையாதென்றும், நாம்செய்யும் காரியமொவ்வொன்றையும் ஈசுவரனுடைய கைங்கர்யமாகப்பாவித்து செய்துவர வேண்டுமென்றும், அவ்விதம் செய்வதினால் பரஸ்பரம் அன்பு விருத்தியாகிச் சகோதரபாவம் பரவி, சச்சரவுக்கிடமன்னியில் ஜனங்கள் ஒத்து வாழக்கூடுமென்றும் தங்களிடம் கல்விகற்கும் மாணாக்கர்களுக்குக் கற்பித்து

வந்தார்களெனத் தெரியவருகிறது. தாங்களும் தங்களுடைய நடைத்தையால் மேற்படி கொள்கைகளை அனுஷ்டித்துக்காட்டியும் வந்தார்கள். ஒவ்வொருவனும், காயம், வாக்கு, மனசு, இவைகளினால் செய்யும் காரியங்கள் ஈசுவரன் காரியம் என்று பாவித்து தினசரி நடக்க வேண்டுமென்ற கருத்து அமைந்த மந்திரத்தை துவிஜர்களுக்காக ரிஷிகள் ஏற்படுத்திய சந்தியாவந்தனத்தில் சேர்த்திருக்கிறார்கள். இதன்றி மனிதர்களை இஹத்திலும் பரத்திலும் முன்னுக்கு வரவொட்டாமல் செய்யும் அபகுணங்களான கோபம், ஆசை இவைகளைத்தவிர்க்க வேண்டும் என்ற கருத்தடங்கிய மந்திரத்தையும் மேற்படி சந்தியாவந்தனத்தில் சேர்த்துள்ளார். யார் யார் எந்த எந்த தேவதையை உபாசித்தாலும் எல்லாம் ஒரே ஈசுவரனைப்போயடையுமென்று கருத்தடங்கிய மந்திரத்தையும் சந்தியாவந்தனத்தில் சேர்த்துள்ளார். இதேகருத்தை ஸ்ரீ கிருஷ்ண பகவானும் கீதையில் அருளியிருக்கிறார். ஆனால் இக்காலத்திய துவிஜர்களில் நவீன இங்கிலீஷ் பாடசாலைகளில் கல்வி கற்று சர்வகலாசாலையில் பட்டம் பெற்ற அநேகர் சந்தியாவந்தனம் செய்யாமலே விட்டுவிடுகிறார்கள். செய்பவர்களும்கூட அதனுடைய அர்த்தத்தை கவனித்து அவ்விதம் நடக்கப்பிரயத்தனப்படுவதையும் பெரும்பான்மையாகக் காணவில்லை, சுமார் ஆயிரத்துக்கொருவர் அர்த்தத்தை கவனித்து நடப்பார்களோ என்னவோ சந்தேகமாயிருக்கிறது. முற்காலத்தில் இவ்விந்தியாவில் கல்வி கற்பிக்கும் தொழிலை வஹித்தவர்கள் பிராமணர்களே ஆவர். இவர்கள் குழந்தைகளைக் கல்வி கற்பிக்க உபாத்தியார் வீட்டுக்கனுப்புமுன் குழந்தைகளுக்கு உபநயன ஸம்ஸ்காரம் செய்து அனுப்புவது வழக்கமாயிருந்தது. உபநயன ஸம்ஸ்காரகாலத்தில் சந்தியாவந்தனம் கற்பிக்கப்படும். இச் சந்தியாவந்தனத்தில் மேற்கண்ட உயர்ந்த தத்வங்களைக்கண்டிருக்கிறது. இதை குழந்தைகளுக்கு உபதேசித்து வந்தார்கள் என்றால் மாணாக்கர்களுக்கு எவ்விதக் கல்வி

கற்பிக்கப்பட்டு வந்ததென்பது நன்கு விளங்கும். அரசர் ஸபையிலும் ஆத்ம தத்துவஞானிகள் மந்திரிகளாயிருந்திருக்கிறார்கள். ஸ்ரீராமருக்கு ரிஷி வஸிஷ்டர் மந்திரி. பொதுவாக இக்ஷ்வாகு வம்சத்திற்கே குருவாயும், மந்திரியாயும் இருந்தவர். இதனால் ராஜாங்க நடவடிக்கைகளிலும் ஆத்மார்த்த உலகுவேறு, லௌகிக உலகம் வேறு என்ற வித்தியாசமில்லாமல் நிகழ்ந்துவந்தது.

3. இக்காலத்திய பள்ளிக்கூடங்களிலோ மேற்கண்ட கருத்தை அறிந்து கல்வி கற்பிக்கப்படவில்லை என்பது எல்லாருக்கும் தெரிந்த விஷயமே. அதனால் இக்காலத்திய படிப்பு தாழ்ந்த நிலையை அடைந்து ஸர்வகலாசாலைகளில் பி. ஏ., எம். ஏ. முதலிய பெரிய பட்டங்கள் பெற்றவர்கள் கூட நல்லொழுக்கம் தவறி நடந்துவருவதைக் காண்கிறோம். இக்காலத்திய படிப்பினால் புத்திமட்டும் கூர்மையாகிறதே தவிர ஸன்மார்க்க முறையும் நல்லொழுக்கமும் தெய்வபக்தியும் குறைந்து வருவதைக்காண்கிறோம்.

4. இக்காலத்தில் ஆலயம், பள்ளிவாசல் பூஜைகிரஹம் முதலிய இடங்களில் மட்டும் ஈசுவரன் இருப்பதாகவும் மற்ற இடங்களில் இல்லையென்றும் எண்ணி "அவனன்றி ஓரணுவுமசையாது" என்ற ஆன்றோர் மொழியை மறந்து இக்காலத்திய ஜனங்கள் நடந்துவருவதைக்காண்கிறோம். அதனால் ஜனங்களுக்குள் அன்பு குறைந்து துன்பங்கள் உண்டாக ஏதுவாகிறது.

5. ஈசுவரன் எங்குமிருக்கிறான் என்ற நினைவுடன், ஒவ்வொரு காரியமும் ஈசுவர காரியம் என்று ஜனங்கள் செய்து வருவார்களானால் இப்பொழுது நாம் காணும் பரிதாபமான கட்சிகளைக்காண இடமிராது. கட்சிகள் வரவர அதிகமாய்க்கொண்டுவருவதால் மேற்படி கட்சிக்காரர்களின் வழக்கைத்தீர்க்க ராஜாங்கத்தில் நியாயஸ்தலங்களும் வரவர விருத்தியாகிக்கொண்டே வருகின்றன. அதனால்

வழக்காளிகளும் ராஜாங்கத்தாரும் அதிகப்பொருளைச் செலவழிக்கவும் காரணமாகின்றது. தேசசமாதானத்திற்கு குறைவு ஏற்படுகிறது. அதனால் போலீஸ்சாரர்கள் முதலிய பாதுகாப்புக்காரர்கள் அதிகச் செலவின் பேரில் நியமிக்கவும் ஏதுவாகிறது. இவைகளுக்கு மூலகாரணம் யாதென விசாரிக்கப்புகின் ஈசுவரனுடைய ஒரு பிரபஞ்சத்தை இரண்டாகப் பிரித்து அதாவது ஈசுவர விஷயமானதொன்று மற்ற உலக சம்பந்தமானதொன்று என்று இவ்விதமாய் நம் வாழ்வை இரண்டாய்ப் பிரித்தல்தான். ஆனால் மதஸ்தாபகர்கள் எல்லோரும் இவ்விதம் ஒரு உலகை இரண்டாகப்பிரித்து வாழக்கூடாதென்று வற்புறுத்தி உபதேசித்து இருக்கிறார்கள். அவர்களுடைய சிஷ்யர்களான நாம் உதட்டினால் அவ்வுபதேசங்களை உச்சரித்தாலும் இருதயத்திலுணராமல் நம் வாழ்நாளைக்கழிக்கிறோம். ஆகையால் தான் ஒவ்வொரு தேசமும் நாகரீகமடைந்தாலும் அந்நாகரீகம் வெளிப்பகட்டாயிருக்கிறதே தவிர வாஸ்தவத்தில் காட்டுமனிதனுடைய சுபாவ குணத்தை ஒத்திருக்கிறது. இப்போது ஐரோப்பா தேசத்தில் நடக்கும் உக்கிரமான சண்டையே இதற்கு ஒரு திருஷ்டாந்தமாக ஏற்படுகிறது.

6. முற்காலத்தில் பொதுவாக மாணாக்கர்கள் கல்வி கற்பிக்கும் உபாத்தியாயர்கள் கிரஹத்திலேயே இருந்து அவர்களுடைய மக்கள்போல் பாவிக்கப்பட்டும் கல்வி கற்பிக்கப்பட்டும் வந்தார்கள். அதனால் உபாத்தியாயர்களுக்கும் மாணாக்கர்களுக்கும் அன்பும் ஸ்நேகமும் ஏற்பட்டு வந்தது. இதை அனுசரித்தே சர் ரவீந்திரநாத டாகூர் வங்காள தேசத்தில் போல்பூர் என்ற இடத்தில் ஒரு வித்தியாசாலை ஏற்படுத்தி நடத்திவருகிறார். இம்மாதிரி வித்யாசாலைகள் அநேகம் ஏற்படக்கடவுள் துணை செய்வாராக. இக்காலத்திலோ அவ்வித அன்பும் ஸ்நேகமும் மாணாக்கர்களுக்கும் உபாத்தியாயருக்கும் பெரும்பா

னும் ஏற்பட்டதாகஇல்லை. மேலும் மாணக்கர்கள் பள்ளிக்கூடத்தை விட்டு வெளியில்வந்தால் உபாத்தியாயர்களுக்கும் இவர்களுக்கும் பெரும்பாலும் யாதொரு சம்பந்தமும் இல்லாமல் இருந்துவருகிறது. இக்காலத்திய பெற்றோர்களும் தங்களுடைய குழந்தைகளை பள்ளிக்கனுப்பி ஏற்பட்ட சம்பளத்தை சரியாகக் கொடுத்துவந்தால் தங்கள் பிள்ளைகளின் படிப்பு விஷயமான பொறுப்பு தங்களை விட்டு நீங்கிவிட்டதாக நினைக்கிறார்கள். உபாத்தியாயர்களும் மேலான அதிகாரிகளால் தங்கள் வகுப்புகளுக்குக் கேற்பட்ட பாடங்களின் அட்டவணைப்படி கல்விகற்பித்து வருஷாந்திரப் பரீட்சையில் தேறும்படி செய்துவிட்டால் தங்களுக்கும் மாணாக்கர்களுக்கும் உள்ள சம்பந்தம் நிறைவேறிவிட்டதென்று நினைக்கிறார்கள். இதை யோசிக்கையில் மாணாக்கர்களுக்குக் கற்பிக்கும் கல்வியை பெற்றோர் ஒரு சரக்குப் போல் பாவித்து உபாத்தியாயரிடமிருந்து கிரயத்திற்கு வாங்குகிறதாகக் கொள்ளலாம். பொதுவாகக் கல்வியானது மாணாக்கர்களின் நடத்தையை சீர்ப்படுத்துவதற்காக ஏற்பட்டதென்பதை உணர்வதாகத் தெரியவில்லை. தற்கால நிலைமையில் அநேக மாணாக்கர்கள் தங்கள் பொறோர், பாதுகாப்போர் இவர்களைவிட்டு வேறு இடங்களுக்குச் சென்று கல்வி கற்கும்படியாக நேருகிறதில் அவர்களுடைய நடத்தையை கவனித்து சீர்ப்படுத்துவோர் இல்லாமலிருந்து வருகிறது. பள்ளியில் கல்விகற்கும் காலம் தவிர மாணாக்கர்கள் வெளியில் வந்த பிற்பாடும் அவர்கள் விளையாடும் காலத்திலும் உபாத்தியாயர்கள் அவருடன் கூடயிருந்து உறவாடி விளையாடுவாரானல் முன் போல் மாணாக்கர்களுக்கும் உபாத்தியாயர்களுக்கும் ஸ்நேகமும், அன்பும் உண்டாகும். இதை உத்தேசித்தே உயர்ந்த சிந்தனையுள்ள சில உபாத்தியாயர்கள் தங்கள் மாணாக்கர்களுடன் வித்தியாசமின்றி கலந்தே விளையாடி வருகிறார்கள். இதை எல்லா உபாத்தியாயர்களும் அனுசரிப்பதே நலம்.

7. பெற்றோர், பாதுகாப்போர் இவர்களைவிட்டு வேறு இடங்களில் படித்துவருகிறவர்களுக்கு பள்ளிக்கூடங்களை ஒட்டி போஜனசாலைகளும் உறைவிடங்களும் ஏற்படவேண்டியது அவசியமென்று சில ராஜாங்கத்தாரும், சில சொந்த வித்தியாசாலை ஸ்தாபகர்களும் அபிப்பிராயப்பட்டு வேண்டிய ஏற்பாடு செய்துமிருக்கிறார்கள். அப்படி போஜனசாலைகளில் படிக்கும் மாணாக்கர்கள் ஒரு குறிப்பிட்ட உபாத்தியாயரின் மேல்பார்வையில் இருக்கும்படி செய்திருக்கிறார்கள். இது நல்ல காரியமே. ஆனால் சில இடங்களில் மேல்பார்வைக்காக நியமிக்கப்பட்டிருக்கும் உபாத்தியாயர்களிற் சிலர் பையன்களுடைய மதம், ஆசாரம் கொள்கை இவைகளை அறிந்து அதற்குத் தக்க ஏற்பாடு செய்யாததினால் பையன்களுக்கு கஷ்டங்கள் நேரிட்டு வருவதானது பரிதபிக்கத்தக்கதே. இவைகளெல்லாம் சீக்கிரம் நேர் படுமென நினைக்கிறேன். இவ்வாறே எல்லாப் பள்ளிக்கூடங்களிலும் போஜன் சாலை ஏற்படவேண்டியது அவசியமென்பது பிள்ளைகளின் நடத்தை சீர்படுவதில் சிரத்தை உள்ளோருடைய அபிப்பிராயம். அவ்விதம் சீக்கிரம் நடைபெற பகவான் அருள் புரிவாராக!

8. கல்வி கற்பிப்பதில் முக்கியமாய் கவனிக்கவேண்டிய சில விஷயங்களை அடியிற் காணலாம்.

ஜீவன்யார்?—சரீரம் வேறு அதற்குள்ளிருக்கும் ஆத்மா வேறு. சரீரம் அழிவுள்ளது. ஆத்மா அழிவில்லாதவன். ஆத்மா ஈசுவரனுடைய அம்சம். ஈசுவரனிடமிருந்து வந்து ஈசுவரனிடம் போய்ச்சேருகிறான். ஆத்மாதான் ஜீவன்.

அவன் சக்திகள் என்ன?—அக்கினியின் பொறிகள் அக்கினிபோலாகி அக்கினியின் குணத்தை அடைவது போலும் ஒரு வித்தானது பெரிய மரமாவது போலும் ஈசுவரனுடைய அம்சமான ஜீவன் ஈசுவரன் போலாய் அவனுடைய சக்தியையும் அடையலாம்.

சகோதரதத்துவம். நம்முடைய தேசத்தவரும், தேசாபிமானியுமான ஸர்ஜகதீச சந்திரவஸு என்ற மகான் தாதுவர்க்கங்கள், புல், பூண்டு முதலிய ஸ்தாவரங்கள், மிருகங்கள், பக்ஷிகள், ஊர்வன முதலிய ஜங்கமங்கள், மனிதவர்க்கம், இவைகளுக்குள் ஒரே தன்மையான உயிர் பரவி இருக்கிறதென்றும், உணர்ச்சி இல்லாததுபோல் தோன்றும் தாதுவர்க்கத்திற்கும் உணர்ச்சி இருப்பதாகவும் ஒரு அற்புதக் கருவியால் நன்கு விளக்கிக் காட்டிவருகிறார். கீதையிலும் பகவான் கிருஷ்ணன், காணப்படுகிற பிரபஞ்சமெல்லாம் நூலில் மணிகள் கோக்கப்பட்டிருப்பதுபோல் தன்னிடத்தில் கோக்கப்பட்டிருப்பதாக அருளியிருக்கிறார்.

मत्तः परतरं नान्यत्किञ्चिदस्ति धनञ्जय ।
मयि सर्वमिदं प्रोतं सूत्रे मणिगणा इव ॥

(கீதை 7-வது அத்தியாயம் 7-வது ஸ்லோகம்).

பிராணிகள் கரியமிலவாயுவை தங்கள் சுவாசத்தினால் வெளியிட அதை ஸ்தாவரங்களான புல், பூண்டு, செடி, மரம் முதலிய உட்கொள்ளுகின்றன. அவைகள் வெளியிடும் பிராணவாயுவை மனிதர்களும் மற்ற பிராணிகளும் உட்கொள்ளுகிறார்கள். இதனால் மனிதர் பிராணிகள், ஸ்தாவரங்கள், தாதுவர்க்கம், இவைகளுக்குள் பரஸ்பர சம்பந்தமேற்பட்டிருக்கிறதென்று நன்கு விளங்குகிறது. ஆகையால் எல்லா ஜீவ ராசிகளுக்குள்ளும் சகோதர பாவமேற்பட்டு நிகழவேண்டுமென்பது ஈசுவர சங்கற்பம் என்று கொள்ளலாம்.

(தொடரும்.)

கே. எஸ். இராமசந்திரையர்.

புத்தகவிமர்சம்.

விசுவநாதன் அல்லது கடமைபூராண்—ஓர் நாடகம். பண்டிதர். ம. கோபாலகிருஷ்ணையர் இயற்றியது. விலை அணா 8.

ஆறு காட்சிகளடங்கிய ஒரு சிறு நாடகமிது. மனோன்மணீயம்போல், இதுவும் வசன நடை யென்றே சொல்லக்கூடிய அகவற்பாவிலேயே இயற்றப்பட்டிருக்கின்றது.

சோழராஜனால் நாட்டைவிட்டுத் துரத்தப்பட்ட பாண்டியனுக்கு உதவியாய் அனுப்பப்பட்டவனான நாகம நாயக்கன், சோழனை வென்று பாண்டியனை மறுபடி முடி சூட்டியபின், துராசை மேலிட்டால் பாண்டியனை புத்தி சுவாதீனமில்லை யென்று வியாஜத்தைக் கூறி காவலில் வைத்து நாகமன் தானே அரசைக் கைபற்றினான். இச்சமாசாரத்தைக் கேட்ட விஜயநகர அரசன் வேகுண்டு, நாகமனைச் சண்டையில் வென்று அவனது தலையைத் தன்னடியில் சேர்ப்பிக்கக் கூடிய வீரன் உளனோ வென்று சபையில் வினவ, நாகமன் மகன் விசுவநாதன் அங்ஙனம் செய்ய இசைந்தான். அங்ஙனமே தகப்பனை வென்று அவனைச் சிறையிட்டு அரசனிடம் கொணர்ந்து நாகமன் தலையை அரசனது பாதத்தில் சேர்ந்து அவனுடைய உயிரைக் காப்பாற்றவேண்டுமென வேண்ட அரசன் சம்மதித்தான். அரசன் விசுவநாதனது அருமைக் குணங்களையும் அற்புதச் செயல்களையும் போற்றி அவனுக்கு தன் மகளை மணம் புரிவித்தான். இதுதான் கதைச் சுருக்கம். விசுவநாதன் இயற்கையில் ராஜவிசுவாசமும் பிதிரு பக்தியும் ஒருங்கே கொண்டவன். அரசனது உத்தரவை ஏற்கும் சமையம் இரண்டு கடமைக்கும் முரண்பட்டபோது அவனது மனதை சமாதானம் செய்து கொண்டு அரசனது உத்தரவை தலைமேல் கொண்டு தவறு செய்த தகப்பனை எதிர்க்கத் துணிகிறான். அவனது அன்னையார் எவ்வளவு முயன்றும் விசுவநாதன் தன் சுயநலத்தையும் தகப்பனுடைய நயத்தையும் பாராட்டாது கொண்ட தீர்மானத்தை செலுத்த முயலுகிறான். தகப்பனை ஜயித்த பிறகு அவனிடம் விசுவநாதன் காட்டும், மரியாதையும், கேட்கும் மன்னிப்பும், நாகமனையே வெட்கப்பட்டு பச்சாத்தாபப்படும்படி செய்கிறது. அரசனது மகளும் விசுவநாதனும் ஒருவரை யொருவர் உண்மைக்காதலுடன் காதலிக்க, மேற்கூறிய வண்ணம் அரசனது அனுமதியால் அவ்விருவரும் வதுவரர்களாகி உள்ளம் பூரித்தனர். விசுவநாதனது கடமைகள் முரண்படும் போதும், தாயார் மகனைத் தடுக்க முயலும்போதும் காட்சிகள் வெகு அழகாயிருக்கின்றன. விசுவநாதனும் அரசுன் மகளும் சோலையில் கண்டு தங்கள் மனதில் கொண்ட காதலை வெளியிடுவதும் நன்றாய் அமைக்கப் பட்டிருக்கின்றது. அடக்கத்துடன் கூடிய காதலின் மிகுதியானது படிப்போருக்கு திருப்திகரமாகவேயிருக்கிறது. இந்நாடகத்தை அவசியம் யாவரும் வாங்கிப் படித்தானந்தம் பெறவும், நடித்துப் பார்த்து ஆனந்தம்பெறவும், வேண்டும் என்பது எமது கோரிக்கை.

இந்தியாவில் மிகப்பெரிதும் பழமையுமான வைத்யசாலை எது?

188?-வருடம் ஜாம்நகரில் ஸ்தாபிக்கப்பட்ட

ஆதங்கநிக்ரஹ ஔஷதாலயம்.

குழந்தைகளுக்கு சகலரோகங்களையும் குணப்படுத்தும்

சஞ்சீவி

பாலமித்ர

300 மாத்திரை

கொண்ட டப்பி

1-க்கு ரூபா 1

வியாதியைப்பற்றி விபரமாய்தெரிவிப்போர்க்கு நன்றாய் ஆலோசனைசெய்து திருப்தியான விடை கொடுக்கிறோம்.

கடிதங்களுக்கு உடனே பதில் எழுதப்படும்

இந்த

ஔஷதாலயத்தில் விருத்த வைத்திய டாக்டர்களும், வித்தியா பட்டப்பெற்ற மேதாவிகளும், சாஸ்திர சம்பன்னர்களும் திறமைவாய்ந்த அதிகாரிகளுமாக நூற்றுக்கணக்கான ஜனங்கள் உத்தியோகம் செய்கிறார்கள்.

முதன்மையான

மருந்து சென்ற 35 வருஷகாலமாகப் உபயோகிப்போருக்கு அற்புத குணத்தைக் கொடுத்து தேகபலத்தையும் மனோவன்மையும் கொடுத்து பெருப்புகழ் படைத்திருக்கிற ஆதங்க நிக்ரஹ மாத்திரைகள்

32 மாத்ரையின் விலை ரூ 1

வைத்திய சாஸ்திரி
மணிசங்கர் கோவிந்தஜீ
ஆதங்க நிக்கிரக
ஔஷதாலயம்
45, மேலக் கோபுர வீதி
மதுரை.

இருமல், கபம்

காசம் இவைகளுக்கு சிறந்தமருந்து

காசாந்தக

மாத்திரை [illegible]ப்

பி1க்குவிலை ரூ 1

இதுவரை எங்கள் கேட்லாக்கை

பார்த்திராவிடில்

உடனே உங்கள்

விலாசத்தை எழுதுங்கள் எவ்வித

செலவில்லாமலும் இனமாய்

அனுப்புகிறோம்

சில பிரதிகளே பாக்கி!

பூர்ணசந்திரோதயம் 4-வது தொகுதி

பைண்டு பண்ணியது.

விலை ரூ 2—8—0

இதில் அடங்கிய முக்கிய விஷயங்கள்.

ஆசிரியர்	விஷயங்கள்
லேட் ப. நாராயணையர்	—கல்வி கற்பித்தல், ஈசுவர கைங்கரியம் எனக்கருதல்.
	பிரஹ்ம ஞானம் என்பது யாது
	பிரஜ்ஞாபாரமிதை
	பிதகோரஸ் சரித்திரம்
	பகவான் கௌதமபுத்தர் சரித்திரம்
	மரணபயம் வேண்டாம்
	ஸ்ரீமான் லெட்பீட்டர் சரித்திரம்
ஆர். ஸ்ரீநிவாசையர் எம். ஏ.	—அஹல்யா சாப விமோசனம்
கே. கோடீசுவரையர்	—அவதாரங்கள்
ஆர். எஸ். நாராயணசாமி ஐயர் பி. ஏ. பி. எல்	—ஆரியர்களின் பூர்வ நாகரீகம்
	ஹிந்துக்களின் பூர்வநூல்கள்
	சங்க்ராந்தி அல்லது உத்திராயணஜி
பண்டித ம. கோபாலகிருஷ்ணய்யர்	—ஸ்நேஹ லதை
ஆர். சுந்தரராஜ ஐயர்	—பெரியோர் மாட்டு தீமைசெய்ய நினைத்தல் தனக்கே துன்பந் தரும்.

இன்னும் அரிய பெரிய பல வியாசங்கள் கொண்டது.

இனிக்கிடைப்பதரிது! முந்துங்கள்!

பூர்ணசந்திரோதயம் ஆபீஸ், மதுரை.